விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 11 புதன்கிழமை (28.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313




# தமிழ் மக்கள் விடுவிக்கப்படாவிட்டால் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகுவர்

## சரத் பொன்சேகா வாசிங்டனில் எச்சரிக்கை



(வாசிங்டன்)

யுத்தத்தின் பின்னரும் தமிழ் மக்கள் முகாம்களில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த மக்களை விடுவிக்காது போனால் எதிர்காலத்தில் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகக் கூடும் என கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்ற இலங்கையில் மீண்டும் போர் ஏற்படும்?

### வைகோ எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் காப்பதற்காக இலங்கையில், மீண்டும் போர் மூளும் என்றும், அதை பிரபாகரன் தலைமையேற்று நடத்துவார் என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார். இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் விழிப்புணர்வு பிரசாரப் பயணம் இராமேஸ்வரத்தில் நேற்று தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வைகோ பேசியதாவது,

1983-ல் இருந்து தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தி வருகிறது. இலங்கையில் உரிமைக்காகப் போராடிய இலட்சக் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற வலியுறுத்தி ஜே.வி.பி.நேற்றுப் பேரணி

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி அமைக்காமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டாம் என வலியுறுத்தி கொழும்பில் ஜே.வி.பி. நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது.

பொரள்ளை கம்பல் மைதானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பித்த எதிர்ப்புப் பேரணியில் சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான ஜே.வி.பி. ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். அரசாங் கத்தின் நடவடிக்கைகளை கண்டிக்கும் சுலோகங்களையும் பதாகைகளையும் ஆர்ப் பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் பேரணியாக லிப்ரன் சுற்றுவட்டம் வரை கோசங்களை எழுப்பியவாறு நடந்து (14ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலி சந்தேக நபரொருவர் நயினாதீவில் வைத்து கைது

### பொலிஸ் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

கரும்புலிகளின் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் நயினாதீவு பகுதியில் இருந்து கிடைத்த தகவல்களை அடுத்தே யாழ்ப்பாணம் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் நிமல் மெதிவக்க தெரிவித்துள்ளார்.

கைதானவர் 2006ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## இரு தேர்தல்களையும் சமநேரத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டம்!

### நவம்பர் 15 இல் முடிவு தெரியும்

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றை ஒரேநேரத்தில் நடத்த முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த மாநாட்டின் போது தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி விசேடதகவல்களை வெளியிடவுள்ளதாக ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தக் கோரினால் (14ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் தேர்தல்களில் எதிர்பாராத திருப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது எதிர்பாராத அரசியல் திருப்பம் ஒன்று ஏற்படும் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

தற்போது ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கூட்டணிக் கட்சிகள் ஏற்கனவே எதிர்க்கட்சியில் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் (14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர்

சிவல்புரி சிங்காரம்

- எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?
- தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பட்ட நெறிக்கான நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்.

## நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த 4 ஆயிரத்து 878 பேர் நேற்று விடுவிப்பு

### இதுவரை 33 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, கொடிகாமம் நலன்புரி முகாம்களிலிருந்து யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட ஆயிரத்து 578 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 878 பேர் நேற்று சொந்த இடங்களுக்கும் உறவினர்களுடனும் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கொடிகாமம் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 618 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 836 பேர் நேற் றுக் காலை சொந்த இடங்களுக்கும் உறவினர் களுடனும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து (14ஆம் பக்கம் பார்க்க)








யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான கணனி கையளிக்கும் நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் பாடசாலை ஒன்றுக்கான கணனியைக் கையளிப்பதையும் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகின்றது.

இப் பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 10.11.2009 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## கல்விமாணி பட்டநெறி நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கல்விமாணி பட்டநெறிக்கு 2009/2010 கல்வியாண்டுக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி மற்றும் முதலாம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெரிவுப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

இம்முறை அதிகளவு ஆசிரியர்களுக்கு வாய்ப்பினை வழங்கும் வகையில் 183 பேர் கல்விமாணிப் பட்ட நெறிக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரிகள்; அழைப்புக் கடிதம், தேசிய அடையாள அட்டை ,பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், க.பொ.த. (உ/த) சான்றிதழ் (முதல் பிரதி),முதல் நியமனக் கடிதம், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ், சேவை சான்றிதழ், தங்களது விலாசத்துடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை.

மேற்குறித்த சான்றிதழ்களின் போட்டோப் பிரதி ஆகியவற்றுடன் குறித்த நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி யாழ். பிராந்திய இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரன்பிள்ளை அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் எட்டாம் பக்கத்தில் உள்ளது. (ச)

## உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் போட்டியில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகமும் நாளை மறுதினம் டயமன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ச-10)

## கத்திரிக்கோலால் கணவன் குத்தியதில் படுகாயமடைந்த மனைவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கணவன் கத்திரிக்கோலால் குத்தியதில் படுகாயமடைந்த மனைவி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு உயிர் இழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் கைதடி கிழக்கு ஆனந்த நகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தாயான அதேஇடத்தைச் சேர்ந்த வாகீஷன் தர்ஷினி (வயது 27) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாவது,

நேற்றுக்காலை பிரஸ்தாப கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண் பாட்டையடுத்து கணவன்,மனைவி மீது கத்திரிக் கோலால் குத்தியுள்ளார்.

இதனால் கடும் காயங்களுக்குள்ளான அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கணவனை கைது செய்துள்ளனர். (ச-5,7)

## அரச வங்கிகளின் கடன் வட்டி வீதத்தை குறைக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அரச வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதங்களை நேற்று நள்ளிரவு முதல் குறைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இதன்படி குறித்த வட்டிவீதம் 8 முதல் 12 வீதம் வரை அறவிடப்பட வேண்டும் என ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற அரச வங்கிகளின் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள கடன்களுக்கும் இந்த வட்டி வீதக் குறைப்பும் பொருந்தும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடன் தவணையைச் செலுத்தாமையால் இதுவரை அரச வங்கிகளினால் விதிக்கப்பட்டுள்ள தண்ட வட்டியும் உடனடியாக இரத்தாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல அரச பணியாளர்களின் கடன் கோரிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி நேற்றைய சந்திப்பின்போது பணித்துள்ளார். (ச-14)

## சரத் பொன்சேகாவுக்கு வாகனம் வழங்கத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அப்போதைய இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அந்த பதவியிலிருந்து விலகும்போது அவர் பயன்படுத்திய வாகனத்தை அவருக்கே வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டிருந்தபோதிலும் அந்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு மீண்டும் அறிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை போர் முடிவடைந்த பின்னர் அன்பளிப்பாக முப்படைத் தளபதிகளுக்குக் கொழும்பு நகரில் தலா 20 பேர்ச் நிலத்தை வழங்குவதாக உறுதியளித்திருந்த போதிலும் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவிருந்த காணி தொடர்பில் கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி காணி, ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியின் போதே முப்படைத் தளபதியாகப் பணியாற்றும் நபர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அவர்கள் பயன்படுத்திய வாகனத்தை அவர்களிடம் ஒப்படைப்பது என்ற அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அரச அதிகாரிகளுக்கும் இந்தச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. சரத் பொன்சேகா இராணுவத்திலிருந்து ஓய்வு பெறாவிட்டாலும் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் அவர் பயன்படுத்திய குண்டு துளைக்காத வாகனத்தை அவருக்கு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டிருந்த ஜனாதிபதி, அதனை சரத் பொன்சேகாவுக்குத் தான் செய்த பாரிய உபகாரம் எனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச-5)

# இலங்கை யுத்தம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தில் மாநாடு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று முடிந்த யுத்தம் தொடர்பிலான ஐரோப்பிய ஒன்றிய மாநாடு எதிர்வரும் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கையில் கடந்த கால யுத்த வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், அகதிகள் விவகாரம் என்பன குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை தொடர்பிலான யோசனை ஒன்றைச் சமர்ப்பித்து அதனை எதிர்ப்புகள் இன்றி ஏகமனதாக நிறைவேற்றியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே இலங்கை அரசாங்கம் இந்த மாநாடு தொடர்பில் அச்சம் கொண்டிருப்பதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இரத்துச் செய்யும் வகையில் மனித உரிமை மீறல் குற்ற அறிக்கை ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டிருந்தது.

அதனையடுத்தே இலங்கை மீதான யோசனைகள் ஐரோப்பிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டன. இதற்கிடையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் காங்கிரஸ் சபைக்கு போர் சம்பந்தமான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடந்த கால யுத்தம் குறித்த விவாத மாநாடு இலங்கை அரசாங்கத்திற்குப் புதிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-5)

## விடுதலைப்புலிகளுக்கு உதவினர்

## சந்தேகத்தில் கைதான இருவருக்கு நவம்பர் 10 வரை விளக்க மறியல்

அநுராதபுரம் விமானப் படை முகாம் மீது தாக்குதல் மேற்கொண்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு உதவியதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இருவர் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரான அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கணக்காய்வாளர் குறித்த விசாரணைகளின் விபரங்களைச் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்குமாறு பிரதம நீதிவானும் மாவட்ட மேலதிக நீதிவானுமாகிய தர்ஷிகா விமலசிறி பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

தாக்குதல் நடத்துவதற்கு வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு உணவு வழங்கியதாக அநுராதபுரம் 2 ஆம் நடவடிக்கைப் பிரிவில் வசிப்பவரான மற்றைய சந்தேக நபருக்கெதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேக நபரான கணக்காய்வாளர் அநுராதபுரம் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் மூலம் விமானப் படை முகாமுக்குப் பிரவேசித்து அங்குள்ள தகவல்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகப் பொலிஸார் முன்னர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். (ச-14)

**புறோயிலர் கோழி இறைச்சி விற்பனைக்கு**

MAXIES (Halal- ஹலால்) புறோயிலர் கோழி இறைச்சி தோல் அகற்றி சுத்தம் செய்தது எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விலை: 1 Kg-480/=
வரணி மிசன் பண்ணை,
விற்பனை நிலையம்,
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.:2868

(3847)

## விஞ்ஞான தின விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உயர் தர கணித, விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ் ஞான தின விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத் தில் மன்றத் தலைவர் த. உதயபவன் தலை மையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து நூல் வெளியிடப்பட்டு அதன் ஆய்வுரையை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரி யர் என். மகேஸ்வரன் வழங்கவுள்ளார்.

அடுத்து பரிசளிப்பு நிகழ்வும், இன்றைய வாழ்விற்கு வழிவகுப்பது ஆன்மீகமா? விஞ் ஞானமா? எனும் தலைப்பில் ஆசிரியர் இரா. செல்வ வடிவேல் நடுநிலை வகிக்க, கொக்கு வில் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆன்மீ கம் என்றும் வேம்படி மகளிர் கல்லூரி மாண விகள் விஞ்ஞானம் என்றும் பட்டிமன்றம் நடத்தவுள்ளனர். (ஓ)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்ட திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஒக்டோபர் மாதத்திற் குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் திகதி மாற்றப்பட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 02 மணிக்கு நடைபெறும் என பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமா காண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் வடமா காண சுகாதார அமைச்சின் உத்தியோகத் தர்கள், வடமாகாண சுகாதார பணிமனை உத் தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றவுள் ளனர்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமூகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின் றார். இக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது (ஓ-6)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சி ரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளி யீடு நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை சி. பத்மநாத னும் மதிப்பீட்டுரையை சைவப் புலவர் க. நித்திய தசீதரனும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-35)

## இல்வச சேவை முகாம்

(சாவகச்சேரி)

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடெட் அனுசரணையுடன் சன்னிதி முருகன் வேக் சொப் சேவிஸ் நிறுவனத்தினால் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பாவனையாளர்களுக்கான இலவச சேவை முகாம் இன்று காலை 9 மணி முதல் 4 மணி வரை 241, பருத்தித்துறை வீதியில் அமைந் துள்ள சேவிஸ் நிறுவன இலவச சேவை இடம்பெறவுள்ளது.

விசேட தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ஓ-17)

## செயற்பாட்டு முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைக ளில் கல்வி கற்கும் தரம் 11 மாணவர்களுக் கான கணித பாட செயற்பாட்டு முகாம் 10 நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது. (ஓ-29)

## மயக்க மருந்து தெளித்து திருடர்கள் துணிகர கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்தவர்கள் மீது மயக்க மருந்தை தெளித்து திருடர்கள் துணிகரமான கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு பெருந் தொகையான பணம் நகைகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பூத்திடும் பனம் தோப்பு இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண் டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவ் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் நித்திரையில் இருந்தவர்கள் மீது மயக்க மருந்தை தெளித்து 60 ஆயிரம் ரூபா பணத் தையும் 15 பவுண் பெறுமதியான நகைகளை யும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ஓ-7)

## நிசா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வலை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கமநெகும திட்டத்தின் கீழ் நிசா அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வலை விநியோகத்திற்கான முதலாவது தொகுதி வலைகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இவ் வலைகள் முதற்கட்டமாக யாழ்ப் பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங் களைச் சேர்ந்த மீனவர்களுக்கு விநியோகிக் கப்படவுள்ளன.

மேலும் இச் செயற்திட்டம் மாவட்ட ரீதியாக விஸ்தரிக்கப்படும் என கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்டப் பணிப் பாளர் கே. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## யாழ். மாநகர சபையின் முதலாவது மாதாந்தக் கூட்ட ஆரம்ப வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் முதலாவது கூட்ட ஆரம்ப வைபவம் இன்று மாநகர ஆணையா ளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர், வண ஆண்டகை யாழ். ஆயர், மௌலவி மகறூவ், விகாராதிபதி மற்றும் சிவஸ்ரீ பிரபா குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் வாழ்த்துரைகளை யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ந. சண்முகலிங்கன் தொடர் ந்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறப்புரை யாற்றவுள்ளார். அன்றைய நிகழ்வில் பதவி ஏற்பு படிவங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## பரு. ஐஸ் உற்பத்தி நிலையம் வெகுவிரைவில் செயற்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஐஸ் உற் பத்தி நிலையங்களுக்கான கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியாகிய நிலையில் இவ் உற்பத்தி நிலையங்களுக்கான இயந்திரங் கள் கொழும்பில் இருந்து நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அளவில் எடுத்து வரப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஐஸ் உற்பத்தி நிலையங்கள் ஊடாக உற்பத்தி மேற் கொள்ளப்படும் போது யாழ். மாவட்ட மீனவர்களின் இப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்படும் என கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்டப் பணிப்பாளர் கே. தர்மலிங்கம் தெரிவித்துள் ளார். (ஓ-7)




## க.பொ.த (உ/த) செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

2009 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையின் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மனைப்பொருளி யல் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள இடம்பெயர் ந்த நலன்புரி நிலையங்களிலிருந்து விடு விக்கப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகமளித்து தமக்கான அனுமதி அட்டைகளை பெற்று இப் பரீட்சைக்கு தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள் ளார்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 021 222 2449, 021 222 9725 ஆகிய தொலைபேசி இலக்கங் களூடாக யாழ். வலயக் கல்விப் பணி மனையுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என யாழ். வலயக் கல்விப் ப்ணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பளை மகா ஜனாக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரின் திறந்த வெளி யரங்கில் கல்லூரி அதிபர் திருமதி. சி. அனந்த சயனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)



கோண்டாவில் வடக்கு கலைவாணி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிராம சேவையாளர் இ. இரத்தினகோபால் மங்கல விளக்கேற்றுவதையும் கலைவாணி சனசமூக நிலைய போசகர் எம். சந்திரலிங்கம், பரஞ்சோதி மகாவித்தியாலய அதிபர் திருமதி விமலராஜ் கடம்பமலர் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பர்களாவது எப்படி?

ஒருவர் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு வந்தார்.

''யார் என்னைப் பார்த்தாலும் முகத்தை திருப்பிக் கொண்டு போய் விடுகிறார்கள்'' என்றார்.

''அன்பாகப் பேசும் நண்பர்கள் யாரும் உங்களுக்குக் கிடையாதா?'' என்று கேட்டேன்.

அமெரிக்க எழுத்தாளர் டேல் கார்னகி, 'நல்ல நண்பர்களைப் பெறுவது எப்படி? என்பது பற்றி சில வழிகள் கூறியிருக்கிறார் என்பதையும் அவரிடம் கூறினேன்.

அதைக் கேட்டதும் அவர் ஆர்வமாக அதை எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்றார்.

அதைக் கூற ஆரம்பித்தேன்.

- நம்மைப் பற்றியே மற்றவர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்காமல் அவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் பேசுகின்ற விடயம் சாதாரணமாக இருந்தாலும், 'ஆமாம்', 'நல்லது' என்று சொல்லி ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- யாரிடமும் கூடியவரைக்கும் தேவையில்லாமல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அடுத்தவர் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். எப்போதும் மற்றவர்களின் மனோபாவத்தை நாம் புரிந்து கொண்டால் நம்மை யாராலும் வெல்ல முடியாது.
- ஒருவரிடம் பேச ஆரம்பிக்கும் போது இயல்பாக, அன்பாக ஆரம்பிக்க வேண்டும்.
- நாம் செய்த தவறுகளை தயக்கமில்லாமல் ஒப்புக் கொள்ளவேண்டும். அதற்காக கூச்சப்பட வேண்டாம்.
- மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். 'நீங்கள் சொல்வது தவறு' என்று முகத்தில் அடித்தாற்போல் பேசக் கூடாது.
- யாரிடமும் அநாவசியமாக சவால் விடக் கூடாது.
- நாம் எதை நினைக்கிறோமோ, அதை நம் எதிரில் இருப்பவரே அதைப் புரிந்து கொண்டு அவரே அதைச் சொல்லும்படி முயற்சி செய்ய வேண்டும்.
- நம் யோசனையைப் புதிய முறையில் சொல்லலாம்.
- மிகவும் முக்கியமானது என்னவென்றால், அநாவசியமாகப் பொய் சொல்லக் கூடாது. அப்படியே சொல்ல நேர்ந்தால் அந்தப் பொய் நம்பும் படியாக இருக்க வேண்டும்.
- உங்களது மனம் எவ்வளவு அசுத்தமாக இருந்தாலும், மற்றவர்களிடம் பேசும் போது உயர்ந்த எண்ணங்களை மட்டுமே வெளிப்படுத்துங்கள்.
- நல்ல நண்பர்களை மிகவும் கஷ்டப்பட்டுத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இத்தனை வழிமுறைகளையும் கடைப்பிடித்தால் நமக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். முக்கியமாக, மேலே சொன்ன எல்லாப் பண்புகளும் மற்றவர்களிடம் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதை விட, அவை நம்மிடம் உள்ளனவா என்று பார்த்தல் வேண்டும்.

அப்படிச் செய்தால், முதலில் நாம் மற்றவர்களுக்கு நல்ல நண்பர்களாக மாறுவோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாட்டின் சகல சமூகங்களும் கல்வித்துறையில்

## எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

முஸ்லிம் சமூகம் மாத்திரமின்றி இந்நாட்டின் சகல சமூகங்களும் கல்வித் துறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்திற்குள் தீர்வை எட்ட கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முஸ்லிம் கல்வி அபிவிருத்திக் குழுவின் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய கல்வி அமைச்சினால் இந்தக் குழு நியமனம் செய்யப்பட்டது.

கடந்த 60 வருடங்களின் பின்னர் முஸ்லிம் சமூகம் கல்வித் துறையில் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை இந்த அரசாங்கம் சகல சமூகத்தையும் சமமாக நோக்குகிறது என்பதற்கோர் நல்ல சான்றாகும்.

ஒரே ஒரு முஸ்லிம் கல்வி அமைச்சராக இருந்த மறைந்த பதியுதீன் முகம்மத், முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கிய ஆசிரிய நியமனங்களின் பின்னர் அதிகளவிலான ஆசிரியர் நியமனங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு என்னாலேயே வழங்கப்பட்டுள்ளன.

மலையகத் தோட்டப்புற முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்காக கடந்த 2007 ஆம் ஆண்டில் 600 முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

இதுதவிர 1991,92 ஆம் ஆண்டுகளில் வட மாகாணத்திலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கென அமைச்சர் ரிஷாட் பதியூதீனின் வேண்டுகோளுக்கிணங்க 680 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்கள் தற்போது ஆசிரிய பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

பயிற்சியை நிறைவு செய்ததன் பின்னர் நிரந்தர ஆசிரியர்களாக ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

அது மாத்திரமின்றி அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து முஸ்லிம் தேசிய பாடசாலைகளின் உயர்தர வகுப்பு ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரியர்களாக அப்பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் சமூகமும் எதிர்நோக்கும் இதர பிரச்சினைகளும் விரைவில் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ஓ-4)

### திருநெல்வேலி றோ.க.வில் பரிசளிப்பு விழா

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி பாலசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (நு)

### சாட்டி கடற்கரைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று சாட்டி கடற்கரைப் பகுதிக்குச் சென்று அப்பகுதியின் புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதியுடன் கலந்துரையாடியதுடன் சாட்டி கடற்கரை பகுதி புனரமைப்புப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். (ச)

## தீவக வலய தொண்டர் ஆசிரியர்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் இன்னும் சில தினங்களில் வழங்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறையில் வைத்து தீவக வலய தொண்டர் ஆசிரியர்களுடனான சந்திப் பொன்று இடம்பெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும்,வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இங்கு உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த காலங்களில் தொண்டர் அடிப்படையில் மிகவும் கஷ்டமான நிலையில் பாரிய அர்ப்பணிப்புகளுடன் ஆசிரிய நியமனங்கள் இன்னும் சில தினங்களில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்ததுடன் இந் நியமனங்களைப் பெற்று இப்பகுதி மாணவர்களது கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அக்கறையுடன் உழைக்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நியமனங்கள் வழங்கப்படவுள்ள தொண்டர் ஆசிரியர்களை வலய ரீதியாகச் சந்தித்து அவர்களது பெயர் விபரங்களை தான் உறுதிப்படுத்தி வருவதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நியமனங்கள் கிடைத்த பின்னர் 5 வருட காலத்துக்குள் டிப்ளோமா பட்டம் பெற்று உரிய முறையில் தங்களது திறமைகளை பூர்த்தி செய்து கொண்டு நிரந்தர நியமனங்களை நாடிச்செல்ல இயலும் என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ச)

## இராசி பலன்

28.10.2009
(ஐப்பசி 11 புதன்கிழமை)
தசமி முன்னிரவு 10.58 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 2.10 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெருமையடைதல், உடல் நலம், தனலாபம். |
| இடபம் | தொழில் நன்மை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, புதிய முயற்சி. |
| கடகம் | காரிய தாமதம், அபகீர்த்தி, போசன சுகம், ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, பணவருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | செய்தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், தேகநலன், முயற்சி பலிதம். |
| துலாம் | வியாபார நன்மை, தனவிரயம், பூர்வ புண்ணிய கருமம், வேலைச்சுமை. |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, சுபசெலவு, நல்ல செய்தி. |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, போசன சுகம், பொருள் சேர்க்கை. |
| மகரம் | உணர்ச்சி வசப்படல், முயற்சி தாமதம், நிலை மாற்றம், தன விரயம். |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, தன்னம்பிக்கை, அதிக பிரயாசை, போசன சுகம். |
| மீனம் | காரிய அலைச்சல், மனஸ்தாபம், சுபசெலவு, வேலைச்சுமை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 |
| தக்காளி | 60 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 100 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 150 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 100 | 100 |
| லீக்ஸ் | 110 | 140 | 140 |
| பீற்றூட் | 25 | 40 | 60 |
| கறிமிளகாய் | 50 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 240 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

# விஜய நகரப் பேரரசு

37

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

அதன் பின் இப்ராஹிம் அடில்ஷா விஜய நகர ராஜ்யத்தின் மீது படை யெடுத்தான். ஆனால் கேலடித் தலைவன் சதாசிவ நாயக்கன் இப்ராஹிமை வென்று துரத்தினான். பீடாருக்குச் சொந்தமான கல்யாணிக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு 1548 இல் ராமராயன் பர்ஹான் நைஜாம் ஷாவுக்குத் துணை செய்தான். பர்ஹான் 1553 இல் இறக்கும் வரையில் கல்யாணிக் கோட்டை அவன் வசத்திலேயே இருந்தது. அவனுடைய மகன் குதுப்ஷாவுடன் நைஜாம் ஷா கோல் கொண்டா சுல்தானாகிய இப்ராஹிகுதுப் ஷாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு பிஜப்பூர் மீது படையெடுத்து 1557 இல் குல்பர்காவை முற்றுகையிட்டான். இப்ராஹிம் அடில்ஷா தனக்குத் துணை செய்யுமாறு ராமராயனை வேண்டிக்கொண்டான். ராமராயனும் உடனே தன்படையுடன் சென்றான். ஆனால் அவன் போர் செய்து ரத்தஞ் சிந்த விரும்பவில்லை . எனவே அவன் அப்போது மாறுபட்டிருந்த எல்லா கல்தான்களையும் அழைத்து பீமா நதியும் கிருஷ்ணா நதியும் கூடுகிற இடத்தில் ஒரு மாநாடு கூட்டினான். அந்த மாநாட்டில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக பரஸ்பர உதவி பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன்படி அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளுள் யாதேனும் ஒன்று வன்முறைத் தாக்குதலுக்குட்பட்டால் ஏனைய நாடுகள் ஒன்று சேர்ந்து அவ்வாறு தாக்குதலைத் தொடங்கிய நாட்டை எதிர்க்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது .இந்த நாளில் அந்த ஒப்பந்தத்தைக் கூட்டுப்பிணைய ஒப்பந்தம் என்று கூறுவர்.

இந்த நால்வர் மாநாட்டிற்குச் சிறிது காலத்திற்குப் பின் இப்ராஹிம் அடில்ஷா இறந்து போனான். அவனுக்குப்பின் அவனுடைய இளவயது மகன் அலிஅடில்ஷா பட்டத்துக்கு வந்தான். பிஜப்பூருக்கும் விஜய நகரத்திற்கும் இருந்த இனிய தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அலி அடிசா வழக்கத்திற்கு மாறான செயல் ஒன்றைச் செய்தான் என்று பெரிச்சா கூறுகிறார். அவன் பட்டத்திற்கு வந்த சிறிது காலத்திற்கு இராமராஜனுடைய மக்களில் ஒருவன் இறந்து போனான். அதற்காக தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்பிய அலி விஜய நகருக்கு நேரில் சென்றான். அங்கு அவன் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டான். ராமராயனுடைய மனைவி அவனை தன் தத்துப்பிள்ளையாக ஏற்றுக்கொண்டாள். மூன்று நாள் விஜய நகரில் தங்கிய பின் அலி பிஜப்பூருக்குப் புறப்பட்டான். அப்போது ராமராயன் அவனை நகருக்கு வெளியிற் சென்று வழியனுப்பவில்லை. அந்த அவமதிப்பை அலி தன் மனத்தில் நிரந்தரமாக வைத்துக் கொண்டான். தன்னுடைய நட்பைப்பெறுவதற்காக சுல்தான் இவ்வளவு பணிவாக நடக்கிறானென்றால் அவனுடையவலிமை மிகவும் குறைந்திருக்க வேண்டுமென்று ராமராயன் எண்ணினான் போலும்.

நால்வர் கூட்டுப் பிணைய ஒப்பந்தத்தை முதலில் மீறியவன் ஹுசைன் நைஜாம் ஷாவே அவன் 1560 இல் பிஜப்பூர் மீது படையெடுத்தான்.அலி விஜயநகருக்கு ஓடி ராமராயனுடைய துணையை நாடினான். ராமராயனும் துணைபுரிய இசைந்தான். மேலும் ஒப்பந்தப்படி கோல் கொண்டா சுல் தான் இப்ராஹிம் குதுப்ஷாவும் பிஜப்பூரின் துணைக்கு வரவேண்டுமென்று ராமராயன் கூறினான். அவன் விருப்பமில்லாமலே அதற்கு இணங்கினான். ஆனால் கூட்டாக வந்த படைகளைக் கண்டவுடனே நைஜாம்ஷா பின்னடைந்து தன்னுடைய ராஜ்ய எல்லைக்குள் சென்று விட்டான். கல்யாணியைக் காக்கும் பொறுப்பைத் தன்னுடைய இந்துத் தளபதிகளுள் ஒருவனான போப்பால் ராஜிடம் நைஜாம்ஷா ஒப்படைத்தான். கூட்டுப்படைகளுள் ஒரு பகுதியைக் கல்யாணி முற்று கைக்காக விட்டுவிட்டு அடில்ஷாவும் ஏனையோரும் அகமது நகரத்தின் மீது சென்றார்கள். கூட்டுப்படைகள் நைஜாம்ஷாவை ஜம்கெட் என்னுமிடத்தில் தோல்வியுறச் செய்தன. புறமுதுகிட்டு ஓடிய அவனைக் கூட்டுப்படைகள் தௌலதாபாத் வரையில் துரத்திச் சென்றன. இனிமேல் எதிர்த்து நிற்க முடியாததென்று உணர்ந்த நைஜாம்ஷா கல்யாணியை அலி அடில்ஷாவுக்குச் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான். அதனால் அடில்ஷா ராமராயனுக்கு மிகவும் கடமைப்பட்டவன் ஆனால்,அதன்பின் ராமராயன் பீடாரின் மீது படையெடுத்து பரீதுஷாவைத் தோல்வியடைச்செய்தான். அதனால் ராமராயன் செய்யும் போர்களில் அவனுக்குத் துணை புரிவதற்குப் பரீதுஷா இசைந்தான்.

ராமராயன் முதலில் கோல் கொண்டா சுல் தான் குதுப்ஷாவின் அவையில் ஓர்அலுவல னாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவன். எனவே அந்த ராஜ்யத்தின் உள்நாட்டு நிலையைப் பற்றி அவன் நேரடியாக அறிந்திருந்தான். அன்றியும் அந்தராஜ்யத்தின் பிரபுக்களுள் பலர் அவனுடைய நண்பர்களாக இருந்தார்கள். இப்ராஹிம் குதுப்ஷா கோல் கொண்டாவின் அரசனாவதற்கு முன் தன்னுடைய சகோதரனுடைய சீற்றத்திலிருந்து தப்புவதற்காக விஜய நகருக்கு ஓடி வந்து அடைக்கலம் புகுந்தான். பின்னர் 1550 இல் அவன் சகோதரன் இறந்த பிறகு இராமராயன் அவன் கோல் கொண்டாவின் அரசனாவ தற்குத் துணை புரிந்தான். அதனால் தொடக் கத்தில் இப்ராஹிம் குதுஷாவும் ராமராயன்னும் நண்பர்களாய் இருந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர்களுடைய தன்னலப் பற்றுகள் அவர்களுடைய நட்புறவைச் சிறிது சிறிதா கத் தேய்க்கத் தொடங்கின. அதனால் அக மது நகருக்கெதிராகப் போர் செய்வதற்கு ராமராயன் அழைத்த போது இப்ரா ஹிம் குதுப்ஷா அரைமனதுடன்தான் இசைந்தான். பின்னர் அவன் பிஜப்பூருக் கெதிராக வெளிப்படையாகவே பகைமை பாராட்டி அகமது நகருடன் சேர்ந்து கொண்டு கல்யாணியை முற்றுகையிட்டான். அதனால் கல்யாணியைக் காப்பதற்கு ராமராயன் சென் றான். அதே சமயத்தில் கோல் கொண்டா ராஜ் சியத்தின் தென் மாவட்டங்களின் மீது படையெடுக்குமாறு ராமராயன் தன்னுடைய தம்பி வேங்கடாத்திரிக்கு ஆணையிட்டான் . அதனால் குதுப்ஷாவும் நைஜாம்ஷாவும் கல்யாணி முற்றுகையைக் கைவிட்டு பின்னடைந் தார்கள். ராமராஜன் நையாம் சாவை துரத்திச் சென்றான். அடில்சார் குதுப்ஷாவை துரத்திச் சென்றான். விஜய நகரப்படைகள் மீண்டும் அகமது நகரை முற்றுகையிட்டனர். ஆனால் அண்மையில் இருந்த ஆற்றில் வெள்ளம் வந்து விட்டதால் விஜய நகரப்படைகள் பின் னடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னடையும் போது அவற்றுக்கு சேதமும் ஏற்பட்டது. அடில்ஷாவிடம் தோல்வியடைந்த குதுப்ஷா பல தொல்லைகளுடன் தன் தலைநகருக்கு திரும் பினான்.வேங்கடாத்திரியின் படையெடுப்பால் அங்கே மிகுந்த குழப்பம் ஏற்பட்டிருந்தது. விரைவில் இராமராஜனும் அகமது நகரில் இருந்து திரும்பி கோல் கொண்டாமீது சென் றான் . அவனது கவனத்தை வேறுபக்கம் திருப்பும் நோக்கத்துடன் குதுக்ஷா கொண்ட வீட்டைத் தாக்கினான்.

ஆனால் அங்கும் அவன் தோல்வியே கண்டான். அதன் பின் அவனுடைய நாட்டை விஜயநகரப்படைகள் சூறையாடி அங்கிருந்த முக்கியமான எல்லாக் கோட்டை களையும் கைப்பற்றிக்கொண் டனர். இறுதியில் சுமார் 1563 இல் கோல் கொண்டா , கனபுரம் , பங்கல் ஆகிய நகர் களை ராமராயனுக்கு கொடுத்து குதுக்ஷா சமாதானம் செய்து கொண்டான். அந்தப் போர் விஜயநகருக்கும் கோல் கொண்டாவுக் கும் இடையில் இருந்த பிளவை அதிகமாக் கியது. முஸ்லிம் ராஜ்சியங்களின் தோல் விக்கு மானக்கேட்டுக் கும் மீண்டும் மீண்டும் காரணமாய் இருந்த இந்து ராஜ்சியமான விஜய நகரத்தை அழித்தே தீர்வதென்று இப்ராகீம் குதுப்ஷா உறுதி பூண்டான். முஸ் லிம் ராஜ்சியத்தில் இருந்து சென்ற தூதர்க ளையும் ராமராஜன் உரிய மதிப்புடன் நடத்த வில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

(தொடரும்)

# சர்வதேச யுத்தக் குற்ற நீதிமன்ற விவகாரத்தில் திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி பெறுவோம்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

திட்டமிட்டுச் செயற்பட்டு சதிகாரர்களை இனங்கண்டு கடந்த காலங்களில் வெற்றிகளை பெற்றதைப் போன்று சர்வதேச யுத்த குற்ற நீதிமன்ற விவகாரத்திலும் திட்டமிடப்பட்ட ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றி பெறு வோம் என நம்புகின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம திங்கட்கிழமை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சு நடத்திய ஜனாதிபதி அங்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஜனாதிபதி அங்கு மேலும் கூறுகையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு தொழில் ரீதியான பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு நியாய மான தீர்வுகள் அவசியம் . அரசாங்கம் என்ற ரீதியில் முடியுமான வரை நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எனினும் தொழில் சங்கங்களின் போர்வையில் சர்வதேச சதித்திட்டங்கள் வெளி வர சாத்தியங்கள் உள்ளன.

எனவே தொழில் சங்கங்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் முதலாவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் விசேட அமர்வு விவகாரம் வந்தது. அதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை விவகாரம் வந்தது.அதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை மற்றும் பிரசஸ்ஸல்ஸ் விவகாரம் உருவொடுத்தது.

மேலும் இலங்கை இராணுவத்தினர் பெண்களை பாலியல் ரீதியில் துன் புறுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டது. எனினும் சதிகாரர்களை இனம் கண்டு திட்டமிட்ட ரீதியில் அவற்றில் வெற்றி கண்டோம். எனவே தற்போது எழுந்துள்ள சர்வதேச யுத்தக் குற்ற நீதிமன்ற விவகாரத்திலும் சதி காரர்களை இனம் கண்டு திட்டமிடப்பட்ட ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றி பெறுவோம் என்று நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை ஏற்படுத்தி அரசாங்கத்தை அசௌவுகரியத்திற்கு உட்படுத்தும் முயற்சி ஒன்று தற்போது காணப்படு கின்றது.நாடு பெற்றுக்கொண்ட முக்கியத் துவம் மிக்க வெற்றியின் ஒரு பகுதியினரான தொழிலாளர் வர்க்கத்தின் மன உறுதியை தகர்த்து. அரசியல் இலாபம் தேட முயற்சிக்கும் அரசியல் வாதிகளின் சதித் திட்டங்களுக்குள் சிக்கி



விட வேண்டாம் என்று கோருகின்றேன்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தில் அனைத்துத் தொழிலாளர் வர்க்கத்தினரும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். மக்களின் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும் வரை எந்த சதித்திட்டத்தாலும் நாட்டின் வெற்றிப்பயணத்தை திசை திருப்ப முடியாது.

அமைச்சர்களான தினேஷ்குணவர்த்தன, ஏ.எச்.எம்.பௌசி, டலஸ் அழகப் பெரும, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மேர்வின் சில்வா மற்றும் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# கொலைக் குற்றவாளிகள் மூவருக்கு மரணதண்டனை

## வடமத்திய மாகாணமேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

மூன்று வெவ்வேறு ஆட்கொலை சம்பங்வகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூவருக்கு வட மத்திய மாகாண மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்தது.


இந்த மூன்று கொலைகள் சம்பந்தமாக வழக்கு விசாரணை வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜசுந்தம் முன்னிலையில் நடத்தப்பட்ட நிலையிலேயே நேற்று முன்தினம் அந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பண்டாரவளை மருதங்கடவல பண்டுலகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

புல்மோட்டைப்பகுதியில் 5 பேரை கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளிகளாக காணப்பட்ட ஒருவருக்கும் இந்த நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.



பண்டுலாகம பகுதியில் தனது மனைவியை கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கும் மருதங்கடவலப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் ஒருவரை கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட மற்றும் ஒருவருக்கு இந்த நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (ஓ-3)






குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அண்ணாவியார் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பரின் மணிவிழா நிகழ்வில் 'வியூகம்' எனும் மலரின் முதற்பிரதியை யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மணிவிழா தம்பதியரிடம் கையளிப்பதையும் மற்றும் மணிவிழா நாயகனுக்கு பதக்கம் அணிவிப்பதையும் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மெயில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் மலர் மாலை சூட்டுவதற்காக நிற்பதையும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும் பேராசிரியருமான எஸ். சிவலிங்கராஜா சிறப்புரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சரத் பொன்சேகாவும் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிங்கப்பூரில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் கூட்டுப்படை தலைமையதிகாரி சரத் பொன்சேகாவும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிங்கப்பூரில் வைத்து சந்தித்துள்ளனர். இந்த சந்திப்பு சிங்கப்பூரில் உள்ள குறொன் பிளாசா ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றதுள்ளது.

இதன்போது இலங்கையின் எதிர்கால ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவின் பெயர் எதிர்க்கட்சியின் பொது ஜனாதிபதி வேட்பாளர் என்ற அடிப்படையில் பேசப்பட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

சரத் பொன்சேகா கடந்த 24 ஆம் திகதி அமெரிக்காவுக்கு புறப்பட்டு சென்ற நிலையிலேயே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. இதேவேளை சரத் பொன்சேகாவுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முறுகல், ஏற்படக்கூடிய வகையில் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சரத் பொன்சேகா நாட்டில் இருந்து வெளியேறும் முன்னர் அவரை சிஹல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் மற்றும் உடுவே தம்மாலோக தேரர் அகியோரும் சந்தித்து ஒரு மணித்தியாலம் அளவில் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்த செய்திகள் யாவும் இலங்கை அரசாங்கத்திற்கு குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கசப்பான செய்திகளாகவே இருக்கப் போகின்றன என தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-4)

# நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வளமான கூட்டணியை களமிறக்குவோம்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச

(கொழும்பு)

ஜனநாயகம், நல்லாட்சி, தேசிய சமாதானம் மற்றும் தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வளமான கூட்டணியொன்றை எதிர்வரும் தேர்தல்களின் போது களமிறக்குவோம் என்று ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகளை ஐ.தே.க. செயல்வடிவில் காட்டினால் மாத்திரமே அதனை பொதுமக்கள் நம்புவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசாங்கத்தின், யுத்தத்தின் பின்னரான நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டதனாலும், ஜனநாயக விரோத செயற்பாடுகள் காணப்பட்டமையாலும், எதிர்கால அரசியலுக்காக வளமான் ஒரு கூட்டணி அமைப்பது தொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்பே கலந்தாலோசித்து உள்ளோம்.

முடிபுகள் எடுப்பதே தவிர புதிதாக கூட்டணி அமைப்பது தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியதில்லை. எமது கூட்டணியின் நோக்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் நல்லாட்சி என்பவையேயாகும்.

ஐ.தே.கவினால் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக தற்போது ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.கவினர் குரல் கொடுக்கின்றனர்.

ஆனால் ஜே.வி.பி. அப்போதே இம்முறையினை எதிர்த்து போராடியது. எவ்வாறாயினும் ஐ.தே.க.வின் மீது பொது மக்களுக்கோ ஏனைய அரசியல் கட்சிகளுக்கோ நம்பிக்கை ஏற்பட வேண்டுமாயின் எதிர்ப்புக்களை வார்த்தைகளில் வெளிப்படுத்தாது செயல்வடிவில் காண்பிக்க வேண்டும்.

நிச்சயமாக எதிர்வரும் தேர்தல்களின் பின்பு நாட்டில் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட்டு நல்லாட்சியே ஏற்பட வேண்டும்.

ஆனால் மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தலை நடத்த இந்த அரசாங்கம் முயற்சிப்பது மக்கள் ஆணையை மீறும் செயலாகும். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பாகல்

Botanical Name- Momordica Charantia
Family -Cucubitaceae
Engl - Biher gourd
Sinh - Kariwila

ஓராண்டு பற்றுக் கம்பிகளைக் (tendril) கொண்ட ஏறுகொடி. தண்டு நீளமானது, நிறையக் கிளைகளைக் கொண்டது. நிறைய அல்லது குறைவான மயிர்களைக் கூடுதலான மயிரமைப்பைக் கொண்டிருக்கும். தனியிலைகள், ஒன்றுவிட்ட இலையமைப்பு 6-12.5 செ.மீ நீளமும் கோள வடிவானதுமாக இலைகள் காணப்படும். இலைகளின் விளிம்பு வெட்டிய தோற்றம் கொண்டதாகவும், 5-7 சோணைகளைக் (lobes) கொண்டதாகவும் இருக்கும்.

இவற்றின் நுனி கூரானதாகவோ அல்லது மழுங்கியதாகவோ இருக்கும். ஒழுங்கான பூக்கள், ஒருபாலானவை, மஞ்சள் நிறமாகக் காணப்படும். நீண்ட காய்களைக் கொண்டது.

7.5-15. செ.மீ நீளமுடையது. பழுக்கும் போது செந்நிறத்தை அடையும். பெரிய விதைகளை உடையது. 1-2 செ.மீ நீளமுடையது. சிவந்து சதைப்பற்றால் சூழ் ந்து காணப்படும்.

### பரம்பலும், இனவிருத்தியும்

பொதுவாக தோட்டங்களில் பயிரடப்படுகின்றது. பந்தல்களில் வளர்க்கலாம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைத்து 120 முதல் 130 நாட்களுக்குள் காய்களை பறிக்கலாம். இளம் காய்கள் தேவைப்படின் 60 நாட்களில் காய்களை சேகரிக்கலாம்.

### 100 கிராம் பாகற்காயில் உள்ள சத்துக்கள்

புரதம்1.5 கிராம், கொழுப்பு 0.2 கிராம், நார்ப்பொருள் 0.8 கிராம், காபோவைதரேற்று 4.2 கிராம், கல்சியம் 20 மி. கிராம், பொஸ்பரஸ் 70 மி. கிராம், இரும்பு 1.8 மி.கிராம், தயமின் 0.07 மி.கிராம், றைபோபிளேவின் 0.09 மி. கிராம், விற்றமின் C -88 மில்லி கிராம், மகனீசியம் - 17 மில்லி கிராம், கரோட்டின் 126 மைக்ரோகிராம்.



### மருத்துவப் பயன்கள்

◆பாகல் இலைச்சாற்றை முகத்தில் பூசிவர முகப் பருக்கள் முற்றாக நீங்கி முகத்தின் சருமம் மிகவும் மிருதுவாகவும் மாறும்.

◆ வெந்தயக் குடிநீருடன், பாகற் காய்ச் சாற்றை கலந்து காலையில் உணவுக்கு முன் குடித்துவர நீரிழிவு நோய் குணமாகும். பாகல் காயை விதையுடன் உணவில் சேர்த்து உண்டால் நீரிழிவு நோய்க்கு நல்ல பலனைத் தரும்.

◆பாகல் காய் சாற்றுடன் எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து காலை வேளைகளில் அருந்திவர இரத்தம் சுத்தியாகும். இதனால் தோல் நோய்களான சொறி, சிரங்கு குணமாகும்.

◆ ஒரு டம்ளர் பாகல் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து அருந்த மார்புச் சளி, காசநோய் ஆகியன கட்டுப்படும். மலச் சிக்கல், குடற்புழுக்களும் சாகும்.

◆ சிறு காயங்கள், தீப்புண்கள் ஆகியவற்றின் மீது பாகல்காய் சாற்றை நன்கு தடவி தொற்று நீக்கியாக பயன்படுத்தலாம்.

◆பாகல் இலை, பாகல் பழம் ஆகியவற்றைச் சமமாக எடுத்து சாறுபிழிந்து 15-30 மில்லி அளவு காலையில் உணவுக்கு முன் அருந்திவர மூலநோய் தீரும். கல்லீரல் பலப்படும் அல்லது 30 மில்லி பாகல் இலைச் சாற்றை மோருடன் கலந்து குடிப்பதனாலும் மூல நோய்கள் தீரும்.

◆ பாத எரிச்சலுக்கு பாகல் இலைச் சாற்றை தடவலாம்.

◆பாகல் இலை கைப்பிடியளவு எடுத்து அதனுடன் 6 மிளகு சேர்த்து நன்கு கழுவிச் சுத்தம் செய்த அம்மியில் அரைத்து எடுத்த விழுதை கண்களைச் சுற்றிலும் பற்றாகப் போட்டு வந்தால் கண்களில் தோன்றும் உறுத்தல், நீர்வடிதல் என்பன நீங்கும்.

◆ நீரிழிவு நோயாளிகள் பாகற்பிஞ்சு சாற்றை அருந்தலாம் அல்லது பாகற்காயை கறி சமைத்தோ வற்றலாக்கியோ உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

◆ பாகலின் பழத்தை பிழிந்து சாறு எடுத்து சீனி கலந்து குடிக்க மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலி தீரும்.

◆ இலைகளை உலர்த்தி, பொடித்து, அரித்து வைத்துக் கொண்டு புண்களுக்கு மேல் தூவ புண்கள் ஆறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

# தென்னாபிரிக்க குலினான் சுரங்கத்தில் மிகவும் பெரிய வைரம் கண்டுபிடிப்பு

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் அமைந்துள்ள குலினான் சுரங்கத்தில் இருந்து உயர் தரமான வைரம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பெட்ரா டயமண்ட் என்ற சுரங்கக் குழுவின் செய்தி தொடர்பாளர் தெரிவிக்கையில், தென்னாபிரிக்காவின் கவுடெங் மாகாணத்தின் பிரிட்டோரியா நகரத்தில் இருந்து 25 மைல் தொலைவில் அமைந்துள்ள குலினான் சுரங்கத்தில் கடந்த வாரம் பெரிய உயர்தரமான பட்டை தீட்டப்படாத வைரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்த வைரம் 507 கரட் தரம் கொண்டது. கிட்டத்தட்ட 100 கிராம் எடை கொண்டது. இந்த வைரம் தனிச்சிறப்பான நிறம் மற்றும் தன்மை வாய்ந்தது என்பது ஆரம்பகட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இது, முதல் தர வகையைச் சேர்ந்த வைரமாக இருக்கலாம். இந்த வைரத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை இது உலகளவில் கண்டெடுக்கப்பட்ட பட்டை தீட்டப்படாத உயர்தரமிக்க 20 வைரங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது இந்த வைரத்தை நிபுணர்கள் ஆய்வு செய்த பின்னரே, அது பற்றி கூடுதல் விவரங்கள் தெரியவரும். இதனுடன் 168 கரட் , 58.50 கரட், மற்றும் 53.30 கரட் மதிப்பு வாய்ந்த மேலும் மூன்று வைரங்களும் கண்டெ டுக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.



குலினான் சுரங்கத்தில் ஏற்கனவே மே மாதத்தில் கண்டெடுக்கப்பட்ட வைரம், ஹாங் காங்கில் பல நூறு கோடி ரூபாய்க்கு ஏலம்போனது. கடந்த 1905 ஆம் ஆண்டு தான், ஒரிச்சினல் குலினான் வைரம் கண்டெக்கப்பட்டது அது 3 ஆயிரத்து 106 கரட் மதிப்பு வாய்ந்தது இந்த பட்டை தீட்டப்படாத வைரம், கடந்த 1905ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி பிரடேரிக் வெல்ஸ் என்பவர் சுரங்கத்தில் தோண்டும் போது கிடைத்தது.

பின் இந்த வைரத்தை ஒன்பது சிறிய வைரங்களாக வெட்டி, மன்னர் ஏழாம் எட்வர்டிடம் வழங்கப்பட்டது. கடந்த மே மாதம் குலினான் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட அரிய வகை நீல வைரம், ஹாங்காங்கில் 31 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# ஸ்டெம் செல் ஆய்வில் மோசடி தென் கொரிய விஞ்ஞானிக்கு சிறை

(சியோல்)

தென்கொரியாவில் ஸ்டெம்செல் ஆராய்ச்சியில் மோசடி செய்த விஞ்ஞானி ஹவாங் வூ-சுக் என்பவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

தென்கொரியாவில் அமைந்துள்ள சியோல் தேசிய பல்கலைக்கழகத்தில் ஸ்டெம் செல் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் விஞ்ஞானி ஹவாங். இவர் ஸ்டெம் செல் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இது குறித்து சியோல் நீதி மன்றம் கூறியதாவது,

சியோல் தேசிய பல் கலைக்கழகத்தில் விஞ்ஞானி ஹவாங்மற்றும் அவரது குழுவினர் ஸ்டெம் செல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஸ்டெம் செல் ஆராட்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விஞ்ஞானி ஹவாங் முறைகேடாக தன் தனிப்பட்ட செலவினங்களுக்கு பயன்படுத்தியுள்ளார்.

மேலும் உயிரியல் தொடர்பான விதி முறைகளையும் மீறி உள்ளார். எனவே அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பதோடு அவரை மூன்று ஆண்டுகள் தற்காலிக பணி நீக்கம் செய்ய வும்உத்தர விடப் படுகிறது.



இவ்வாறு சியோல் நீதி மன்றம் தெரிவித்தது. விஞ்ஞானி ஹவாங்கின் நடவடிக்கைகள் நாட்டின் ஆராய்ச்சி வேகத்தை தாமதப் படுத்தியிருப்பதால் அவருக்கு நான்கு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்க வேண்டும் என அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

நீதி மன்றம் தீர்ப்பு குறித்து விஞ்ஞானி ஹவாங் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகியோர் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. (ஓ-4)


# கணனி பிரச்சினைகள் காரணமாக சுவிஸ் அமைச்சரவை செயலிழப்பு

சிக்கலான கணனி பிரச்சினைகள் காரணமாக முக்கிய சுவிட்ஸர்லாந்து அரசாங்க அமைச்சுகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் செயலிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கணனி பிரச்சினைகளால் தகவல் முறைமைகள் செயலிழந்ததால் மேற்படி அமைச்சரவைகளில் வெளிநாட்டு அமைச்சானது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# உலகிலேயே மிகப் பெரிய ஆடை ; பாலஸ்தீன பெண்களின் சாதனை

பாலஸ்தீன வெஸ்ட் பாங்க் பிராந்தியத்திலுள்ள ஹெப் ரோன் நகரைச் சேர்ந்த சுமார் 150 பெண்கள் ஒன்று கூடி உலகிலேயே மிகப் பெரிய வேலைப்பாடுகள் மிக்க ஆடையை உருவாக்கி உலகசாதனை படைத்துள்ளனர்.



107 அடி நீளமும் 59, 4 அடி அகலமுமுடைய இந்த ஆடையானது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கவுள்ளது.

உள்ளூர் தையல் கலை நிபுணர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. (ஓ-4)




# லத்வியாவில் விழுந்த விண்கல்!

லத்வியா நாட்டில் ஞாயிற்றுக்கிழமை மாலை விண்ணில் இருந்து விழுந்த பெரிய பாறை போன்ற கல்லால் பூமியில் 15 மீற்றர் ஆழமும் 5 மீற்றர் அகலமும் உடைய பள்ளம் ஏற்பட்டுள்ளது.

அந்தக் கல் எஸ்தோனியாவை ஒட்டிய எல்லைப் பகுதியில் உள்ள நகர் ஒன்றில் விழுந்தது. கல் ஆகாயத்தில் இருந்து வரும் போது நெருப்புப் பிழம்பு போல் இருந்ததாகவும், பார்ப்பதற்கே பயமாக இருந்ததாகவும் அதை பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கல் விழுந்த பகுதியைச் சுற்றிலும் பாதுகாப்பு வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். கல்லை பார்ப்பதற்கு பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை.

கல்லின் ராசயனத் தன்மையை சோதித்த அந்நாட்டு இராணுவத் துறை இரசாயனவியல் விஞ்ஞானிகள், அந்தக் கல்லில் கதிர்வீச்சு அளவு குறைவாகவே உள்ளதாகத் தெரிவித்தனர்.



அந்தக் கல்லு எரிகல்லாக இருக்கலாம் என்று அந்நாட்டு அதிகாரிகள் கருதுகின்றனர். ஆனால் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. கல்லை சோதிப்பதற்காக லத்வியா நாட்டு பல்கலைக்கழக புவியியல் நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ஓ-4)

# மலேசியாவில் 106 வயது மூதாட்டி

(கோலாலம்பூர்)

மலேசியாவில் வசிக்கும் 106 வயதான இந்திய வம்சாவளிப் பெண் தான், அந்நாட்டின் மிக வயதான பெண் என நம்பப்படுகிறது.

இருந்தாலும், பிறப்பு சான்றிதழ் இல்லாததால், சாதனை புத்தகத்தில் அவரின் பெயர் இடம் பெறவில்லை.

மலேசியாவைச் சேர்ந்தவர் கலாவந்தி இந்திரம். இந்த பெண்ணுக்கு தற்போது 106 வயதாகிறது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் பல ஆண்டுகளுக்கு முன், இவர்களது குடும்பம் பஞ்சாபில் இருந்து மலேசியாவுக்கு குடி பெயர்ந்தது.

கலாவந்தி வைத்துள்ள அடையாள அட்டையில், இவருக்கு வயது 106 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் மலேசியாவிலேயே மிக வயதான வர் இவர் தான். ஆனால், அதிகார பூர்வமான பிறப்பு சான்றிதழ் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இவரிடம் இல்லை. எனவே மலேசியாவில் உள்ள சாதனை புத்தகத்தில் இவர் பெயர் இடம் பெறவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன், காலில் முறிவு ஏற்பட்டதால், கலாவந்தியால் நடமாட முடியவில்லை. சக்கர நாற்காலியில் தான் இவரது வாழ்க்கை கழிகிறது. கண் பார்வையும் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றபடி, நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளார்.

இவரது மகள் கீதா தேவி கூறுகையில்,

என் தாயார் சைவ உணவுகளை மட்டுமே சாப்பிடுவார். நீண்ட காலம் வாழ்வதற்கு இது முக்கிய காரணமாக உள்ளது. மேலும், நகைச்சுவை உணர்வு மிக்கவர் நன்றாகவும் பாடவும் செய்வார். என்றார். (ஓ-4)

# சோமாலியாவில் உளவாளிகளுக்கு பொது மக்கள் முன்னிலையில் மரணதண்டனை

சோமாலியாவில் உளவு பார்த்த குற்றச் சாட்டுக்கு ஆளாகிய இருவருக்கு நூற்றுக் கணக்கான மக்கள் முன்னிலையில் அந்நாட்டு போராளிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அல்-ஷபாப் என்ற மேற்படி போராளிகள் மெர்கா பிரதேசத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடத்தில் பொதுமக்களைக் கூடும்படி பணித்துள்ளனர்.

அத்துடன் பாடசாலை செல்லும் சிறுவர்களும் இந்த மரண தண்டனை நிறைவேற்றத்தை பார்வையிட வழிவகை செய்யும் வகையில் பாடசாலைகளை மூட உத்தரவிட்டனர்.

இந்நிலையில் மைதானமொன்றில் கூடிய பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் உளவாளிகள் என சாந்தேகிக்கப்படும் இரு நபர்களுகளுக்கும் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஓ-4)

# ஆற்றின் தடுப்பு சுவர் இடிந்ததில் வெள்ளத்தில் மூழ்கி 22 பள்ளி குழந்தைகள் பலி

(கோலாலம்பூர்)

மலேசியா தலைநகர் கோலாம்பூரில் இருந்து 200 கி.மீற்றர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் தொடக்கப்பள்ளி குழந்தைகளின் முகாம் நடந்தது. இதில் மலேசியாவில் உள்ள 22 பகுதிகளில் இருந்து ஏராளமான பள்ளிகளைச் சேர்ந்த 300 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் தங்கியிருந்த பள்ளியையொட்டி ஒரு ஆறு உள்ளது. இங்கு ஒரு தடுப்பு சுவர் உள்ளது. பழுதடைந்த அந்த சுவரை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த சுவரை பாதி இடிந்த நிலையில் வைத்திருந்தனர். இதற்கிடையே இடிக்காமல் இருந்த பாதி சுவர் நேற்று முன்தினம் திடீரென இடிந்தது. எனவே ஆற்று வெள்ளம் குழந்தைகள் தங்கியிருந்த பள்ளி வளாகத்துக்குள் புகுந்தது.

இதைத் தொடர்ந்து பள்ளி குழந்தைகள் தண்ணீரில் மூழ்கினர். தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். தண்ணீரில் மூழ்கிய குழந்தைகளை பத்திரமாக மீட்டனர்.

ஆனால் ஒரு குழுந்தையின் பிணம் மட்டும் கிடைத்தது. 22 குழந்தைகளை காணவில்லை. இவர்கள் அனைவரும் தண்ணீரில் மூழ்கி பலியாகி இருக்கலாம் என அஞ்சப் படுகிறது. (ஓ-4)




வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழாவில் 2009ஆம் ஆண்டிற்கான ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வில் இலக்கியத் துறைக்கான விருதை இளையதம்பி செல்லத்துரையும், இசைத் துறைக்கான விருதை செல்வி சறோஜா தம்புவும் பத்திரிகைத்துறைக்கான விருதை அந்தோணி மார்க்கும் பெற்றுக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

# தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்ட நெறிக்கான நேர்முகப் பர்ட்சைக்கு அழைக்கப்படுவோர் விபரம்

தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி மாணிப்பட்ட நெறிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப்பரீட்சைகள் கோப்பாயில் அமைந்துள்ள யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் நடைபெறவுள்ளதாக யாழ். தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப்பட்ட நெறி இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

## ஆரம்ப நெறிப்பிரிவு

தம்பையா வாமதேவன் -சுன்னாகம், திருமதி தனவந்தி நதீஸ்வரன்-அச்சுவேலி, செல்வி கவிதா-சுந்தரப்பிள்ளை-நல்லூர், பத்மநாதன் பத்மகாந்தன்-புலோலி, சிதம்பரநாதன் ராஜேஸ்வரன்-சுழிபுரம், சசிகலா கனகரட்ணம்-கொக்குவில், தாரணி அச்சுதன் - சாவகச்சேரி, சூசைப்பிள்ளை மரியாஞ் சலா-ஆணைக்கோட்டை, பொன்னுத்துரை மதிவண்ணன்-சுன்னாகம், இந்துமதி ராமநாதன் -பருத்தித்துறை, பத்மநாதன் சசிக்குமார்-ஏழாலை.

பொன்மதி இராஜேஸ்வரன் -அல்வாய், பிறேமவள்ளி சற்குணராசா- ஊர்காவற்றுறை, யோஜப் ஸ்ரின் வேணான் மரியா செல்வம் -மானிப்பாய் , ராஜனி சிவப்பிரகாசம்-ஓட்டுமடம், கௌசல்யா -சிவசுதன்-மல்லாகம், வனிதா அருட்செல்வன்-யாழ்ப்பாணம், சண்முகநாதன் முகுந்தன்-சுன்னாகம், சத்தியமலர் நந்தகுமார்-கொக்குவில், குமாரசாமி நந்தகுமார்-வரணி, சிவானந்தன் நவகாந்தன்-திருநெல்வேலி, குமாரசாமி நிசாந்தன்-வட்டுக்கோட்டை, பாக்கியநாதன் சசிகுமார்- நீர்வேலி, தயாபரி சத்தியலிங்கம்-புத்தூர் , சிவாஜினி சதீஸ்சன்-உரும்பிராய், திருநாவுக்கரசு சிவகாசன்-கொடிகாமம், சுபாந்தினி சிவசுந்தரம் -யாழ்ப்பாணம், வாசுகி யோகனந்தம்-மானிப்பாய், கீர்த்தநாதப்பிள்ளை சுந்தரமோகன்-வல்வெட்டித்துறை, சங்கரப் பிள்ளை உமாமகேஸ்வரன்-சாவகச்சேரி, ஜீவந்தி பரஞ்சோதி-சாவகச்சேரி, சுபாசினி சண்முக ராஜா-யாழ்ப்பாணம், தியாகராசா ஜீவரட்ணம்-யாழ்ப்பாணம்.

சிவ புண்ணியம் காயத்திரி- சாவகச்சேரி, திருநாவுக்கரசு முத்தரசன்-சுழிபுரம், வெண்ணிலா பெனார்டோ-வல்வெட்டித்துறை, மைதிலி ஜெயபவன்-கைதடி, யோகலிங்கம் லிங்கேஸ்வரன்-கொடிகாமம், சுப்பிரமணியம் மகாதேவா- அல்வாய், பாக்கியநாதன் சத்தியநாதன்-நீர்வேலி.

கோகிலவதனி செல்வலிங்கம்-வல்வெட்டித்துறை, கலைச்செல்வி சிவலிங்கம் -புலோலி, கருணாவதி தேவதாசன்-தெல்லிப்பழை, யோகலக்சுமி சுப்பிரமணியம்-சுன்னாகம், தேவராசா தேவமோகன்-இளவாலை, சின்னத்தம்பி திருச்செல்வன்-மீசாலை.

துளசி வாசுதேவன்-அல்வாய், வசந்தமலர் வேலுப்பிள்ளை -மல்லாகம் றேணுகா வேதவணம்-உடுப்பிட்டி, கிருஸ்ணபிள்ளை விஜயகுமார்-அல்வாய், குமுதா விக்னராஜா- கொக்குவில், கல்யாணி பாக்கியநாதன்-பருத்தித்துறை, சித்திராதேவி பரராஜசிங்கம்-வேலணை, கபாலினி ரமேஸ்குமார்-சுன்னாகம், ஜெயந்தி சசிதரன்-கரணவாய், மாலினி சிவநாதன்-யாழ்ப்பாணம்.

சசிகலா சூரியகுமாரன்-கரவெட்டி , சிவகலா குணசேகரன்-சுண்டுக்குளி, கந்த சாமிகம்சன்-ஆணைக்கோட்டை, உமாதேவி ஜெகவீரசிங்கம்-சாவகச்சேரி, சதாசிவன் கார்மேகவேணன் -பருத்தித்துறை, தனலட்சுமி அகிலன்-சுழிபுரம், வணஜா பாலசுப்பிர மணியம் -பண்டத்தரிப்பு, சின்னத்துரை கணேசராசா-கொக்குவில், கிருஸ்ணப் பிள்ளை ஜெகநமணன்-அச்சுவேலி, கிருபா காந்தகுமார்-கோப்பாய், சிவ ஈஸ்வரி-சிறி முருகதாஸ் காந்தன்-நீர்வேலி, அண்ணா மலை கருணாகரன்-மானிப்பாய்.

ஜெயந்திமலர் மதியழகன் -நயினாதீவு, வரதராசா நிகிதன்-யாழ்ப்பாணம், கனகசபை பிரபாகரன்-அல்வாய், பரமானந்தர் ரவிக்குமார்-மீசாலை, சத்தியபாமினி சத்தியமூர்த்தி-கோண்டாவில், சுப்பிரமணியம் செல்வேந்திரன்-யாழ்ப்பாணம், கவிதா சிவகாந்தி-திருநெல்வேலி

தேவேந்திரன் ஸ்ரீதரன்- மானிப்பாய், பிரதீபன் தர்சினி -வல்வெட்டித் துறை, நடராஜா விஜயகுமார்-மானிப்பாய், ஜெயலக்சுமி சுரேஸ்-புத்தூர், சுதர்சினி சுதானந்தன்-ஏழாலை, விஜயகலா தர்மராஜா- மானிப்பாய், வரதராஜா திருப்பதி ராஜன்-இணுவில், வத்சலா நிதாகரன்-கொக்குவில்.

கௌசல்யா ராகவன்-சுன்னாகம், வினோசரன்ஸ் சக்திவேல்-வண்ணார் பண்ணை, சண்முகம் சசிலதா-வரணி, நாகநந்தினி செல்வன்-கைதடி, யோகினி சிவானந்தன்-பருத்தித்துறை, சிவ சக்தி வேல் சிவரதீஸ்-சுன்னாகம், பத்மினி ஸ்ரீஸ்கரன்-சாவகச்சேரி, துரைராஜா அருந்தவச்சீலன்-மீசாலை, உதயகலா சந்திரமோகன் -அரியாலை.

சுமாலினி கஜபாலன்-ஆணைக் கோட்டை, யசிந்தா ஜெயக்குமார்-வண்ணார் பண்ணை, வாசுகி மனோரஞ்சிதன்- ஆவரங்கால் புத்தூர், இந்திராதேவி மதிசூதி-கோண்டாவில், சிவசாமி நல்லகுமார்-சுன்னாகம்.

## இடைநிலை நெறி

திருமதி வா.தேன்மொழி -சுன்னாகம், திருமதி நாகநந்தினி-வட்டுக்கோட்டை, சி.பிரகாசன்- சாவகச்சேரி, ந.மயூரன் -நயினாதீவு, திருமதி ச.சத்தியாதேவி-நீர்வேலி, திருமதி கே.ஜெயந்தினி-கோப்பாய், திருமதி லூ.வக்சலா வின்சன்-திருநெல்வேலி.

ம.சந்திரமோகன்- உடுப்பிட்டி , ஸ்ரீ ஜெயசிறி-நெல்லியடி, சு.யோகோத்திரி-யாழ்ப்பாணம், ந.சுதாகர் -வல்வெட்டித்துறை, செல்வி தி.ஜெயதர்சி-மட்டுவில், செல்வி வி.சந்திரிகா-அல்வாய், வை.முருகதாஸ்-காங்கேசன்துறை, செ.செல்வநேல்-அச்சுவேலி, க.பிரதீஸ்-இளவாலை, திருமதி ர.ராதா -வல்வெட்டித்துறை, திருமதி செ.சுகந்தினி-கொழும்புத்துறை, செல்வி ச.நளினி-கொக்குவில், தோ.பிரான்சிஸ்-யாழ்ப்பாணம்.

திருமதி இ.சற்குணவதி-யாழ்ப்பாணம், க.கிருபாகரன்-வண்ணார் பண்ணை, திருமதி ஜெ.சுயந்தினி-வட்டுக்கோட்டை, திருமதி ச.ஜெயசித்திரா-சுன்னாகம், சோ.கிருஸ்ண தாஸ்-மானிப்பாய், க.மணிவண்ணன் -கரவெட்டி, மே.நெல்சன் -மானிப்பாய் , ப.நிறசான்-யாழ்ப்பாணம்.

து.பகிரதன் -யாழ்ப்பாணம், நிசாயினி பரமேஸ்வரி -அளவெட்டி, த.ரஞ்சன் -திருநெல்வேலி, அ.சடச்சரலிங்கம்-புத்தூர், சி.யுவத்திரா-கரவெட்டி, மா.சிறிகாந்தன்-கோப்பாய், திருமதி சு.சுஜிதமலர்-அரியாலை, என்.தெய்வேந்திராசா -வண்ணை வடக்கு, திருமதி ப.திருச்செல்வி-திருநெல்வேலி, ந.கஜேந்திரன் -அச்சுவேலி, சி.மதனராசன்-நீர்வேலி, ஏ.ஈ.தெய்வேந்திரன்-கரவெட்டி.

கே.உமாகரன்-கொக்குவில், செல்வி எஸ்.சர்மிளா-சுழிபுரம், ஜி.விக்னேஸ்வரன்-கரவெட்டி,என்.நந்தீஸ்வரன் -சுழிபுரம்,ஆர்.ராஜ்குமார் -யாழ்ப்பாணம், செல்வி ஆர்.கலைவாணி-இளவாலை, வி.வலன் ரையின் டினேஷ் -உடுவில், திருமதி ஜெ.தயா ளினி -கைதடி, செல்வி கே.துவாரகா-கர வெட்டி, என்.நவஞ்சன்-கொடிகாமம், கே.ஆதித் தன்-சுன்னாகம்.

எஸ்.கிறிஸ்ரியன்-குருநகர், வி.ஜெகதீஸ்வரன் -மாதகல், திருமதி கே. காரியா-கரவெட்டி, திருமதி கே. திருவேணி -கொக்குவில், திருமதி கே.செல்வராஜினி -புலோலி, என் பிரசாந்தன் -வட்டுக்கோட்டை, ஏ.ராஜீபன் -ஆணைக்கோட்டை , செல்வி எஸ்.சிவரூபி -கொக்குவில், எஸ்.சுதர்சன்-உரும்பிராய், செல்வி தி.கௌரி-தெல்லிப்பளை.

திருமதி ரி.சிவீஸ்வரி-சுன்னாகம் , சி.தயாளஜீவன் -சுன்னாகம், வி.உல்லாச னன்-மானிப்பாய், பி.உமாகரன் கரவெட்டி, எஸ்.பாலச்சந்திரன் -பருத்தித்துறை, செல்வி ஏ.திரேசா சசிகலா-யாழ்ப்பாணம்.

ஜீ.பாலகிருஸ் ணன் -ஏழாலை, திருமதி எஸ்.தர்மிலா -கரவெட்டி, ஏ.கிருஸ்ண பிள்ளை -பருத்தித்துறை, வி.குகநாதன்-உரும்பிராய், திருமதி ஆர்.வினோதினி -வட்டுக்கோட்டை, எஸ்.பரமேஸ்வரன் -கொடிகாமம், பி.பார்த்தீபன் -சண்டிலிப்பாய், கெ.சதாசிவம் -கைதடி.

திருமதி எஸ்.தர்சினி -கோப்பாய், திருமதி எஸ்.தயாளினி -கரவெட்டி, எவ் அருள் செல்வன் -பாசையூர், எஸ்.பாலமுரளி-சுன்னாகம், திருமதி ஜி.சுதர்சினி-பருத்தித்துறை, எம்.கங்காதரன்-பண்டைத்தரிப்பு, திருமதி கே.இந்திராணி-வட்டுக்கோட்டை, திருமதி கே.லதா-வட்டுக்கோட்டை, ஜீ.காந்தரூபன் -சுன்னாகம், திருமதி கே.மீரா-மானிப்பாய்.(ஓ)

# முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை தீர்க்கும் ஆற்றல் இலங்கை அரசுக்குண்டு

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சு


போர்க்குற்றச்சாட்டுகள்ஏதேனும் முன்வைக்கப்படுமாயின் நாட்டுக்கே உரிய சட்டக் கட்டமைப்பைக் கொண்டு அவற்றைத் தீர்க்கும் ஆற்றல் இலங்கை அரசாங்கத் துக்கு முழுமையாக உள்ளது என்பது தமது நிலைப்பாடு என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கி லவ்ரோ தெரிவித்தார்.

இலங்கைக்கு கடந்த சனிக்கிழமை வருகை தந்த ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் கொழும் பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே இதனைக் குறிப்பிட்டார்.

இலங் கைக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு முன்வைக் கப்படின் அது குறித்து ரஷ்சியாவின் நிலைப் பாடு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே ரஷ்சிய வெளிவிவகார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். சனிக்கிழமை முற்பகல் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இருநாட்டு வெளி விவகார அமைச்சர்களுக்கு மிடையிலான சந்திப்பில் இருநாடுகளுக்குமிடையே உடன் படிக்கை யொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ஓ)

# பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்க காத்திருக்கும் யாழ். மாவட்டம்

குடிநீர் பிரச்சினை என்பது உலகின் பெரும்பாலான பகுதிகளை அச்சுறுத்தும் பாரிய பிரச்சினையாகும். "நீரின்றி அமையாது இவ் உலகு" என்ற முதுமொழிக்கு அமைவாக நீர் என்பது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் முக்கியமானதாகக் காணப்படுகிறது.



இக்குடிநீர் பிரச்சினையானது தற்போது யாழ். குடாநாட்டின் சில பகுதிகளிலும் தீவகப் பகுதிகள் முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது. இவ்வாறானதொரு நிலை உருவாகுவ்தற்கு எமது செயற்பாடுகளும் அமைந்தது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்றைக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாவட்டத்திலும், தீவகப் பகுதிகளிலும் காணப்பட்ட நீர்வளம் தற்போது இல்லை என்பது வெளிப்படையாக அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு குடிநீர் பிரச்சினை ஏற்படுவதற்கு பிரதான இரு காரணங்களை குறிப்பிட முடியும். அதாவது சமூக காரணங்கள், புவியியல் காரணங்கள் ஆகிய இரண்டுமாகும்.

இவற்றில் சமூக காரணங்கள் என இங்கு குறிப்பிடப்படுவது மக்களின் அன்றாடப் பழக்கவழக்கமாகும். அதாவது நீர் வீணாக்கப்படல் மழை நீர் சேகரிப்பில் அக்கறையின்மை நீர் நிலைகள் பாதுகாக்கப்படாமை மரங்கள் வளர்க்கப்படாமை போன்ற காரணங்கள் தற்போதைய நீர் பிரச்சினைக்கு காரணமாகிறது.

இதே போன்று நமது சூழலில் ஏற்படுகின்ற புவியியல் மாற்றங்கள் அதாவது வறட்சி இதன் காரணமாக நீர் நிலைகள் வற்றுதல் சுனாமி வெள்ளப்பெருக்கு காரணமாக உவர் நீர் கிணறுகளுக்குள் புகுதல் போன்ற காரணங்களும் குடிநீர் பிரச்சினையில் தாக்கம் செலுத்துகிறது.

**"நீரற்ற சூழல் உருவாவதற்கு எமது செயற்பாடுகளே காரணம்"**

இவ்விரு காரணங்களும் சமூகக் காரணம் என்பது மக்களின் அன்றாட செயற்பாடுகளால் அல்லது மக்களின் விழிப்புணர்வற்ற தன்மையினால் உருவாகியது எனலாம். எனவே சமூகப் பொறுப்புள்ள அனைவரும் இதுபற்றிச் சிந்தித்து இதனைத் தடுப்பதற்கு முன்வரவேண்டும். தவறும் சந்தர்ப்பத்தில் எமது எதிர்காலச் சந்ததியை குடிநீர் பிரச்சினையிலிருந்து காப்பாற்ற முடியாது.

இங்கு குடிநீர் என்னும் போது நிலத்தடி நீரே அதில் முக்கியத்துவம் பெறுகிறது. யாழ் குடாநாட்டை பொறுத்த வரையில் பெரும்பாலான பகுதிகளின் நிலத்தடி நீரானது நன்னீராகவே காணப்பட்ட நிலையானது இன்று முற்று முழுதாக மாற்றம் பெற்று உவர்நீராகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிலை தொடர்ந்தால் யாழ். குடாநாடு நீரற்ற வனாந்தராமாகி மாற்றம் பெறும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

நிலத்தடி நீர் குறைவடைவதற்கு பல்வேறு காரணங்களைக் குறிப்பிட முடியும்.

- நீர் நிலைகள் பாதுகாக்கப்படாமை அதாவது குளங்கள் தூர்வை எடுக்கப்பட்டு நீரைத் தேக்கி வைப்பதற்கான வாய்ப்புக்கள் இன்மை.
- மழைநீர் சேகரிப்பில் மக்கள் அதிக அக்கறை செலுத்தாமை.
- மழைநீரை கடலுக்கு செல்ல விடாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் இன்மை.
- மரங்கள் அழிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி பாதிப்பு.
- விவசாயத்திற்காக பாவிக்கப்படும் செயற்கை கிருமி நாசினிகள் மூலம் நீரின் தன்மை மாற்றமடைதல்.

போன்றவற்றை முக்கிய காரணங்களாக குறிப்பிடமுடியும்.

"யாழ் மாவட்ட மக்களின் ஜீவனோபாயத்துக்கு கூட குடிநீரற்ற பரிதாப நிலை உருவாகி வருகிறது"

யாழ். மாவட்டத்தின் குடிநீர் பற்றாக் குறையை நீக்குவதற்காக பல்வேறு வகையான திட்டங்கள் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதும் பாராட்டுக்குரியது. இருந்த போதும் இத் திட்டங்கள் அல்லது குடிநீர் பிரச்சினை தொடர்பாக விழிப்புணர்வானது தீவகப் பகுதிகள் மற்றும் யாழ். நகரின் சில பகுதிகள் குறிப்பிட்ட சில கிராமங்களில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டாலும் கிராமப் புறங்களில் உள்ள மக்கள் இன்னும் குடிநீர் பிரச்சினை தொடர்பாக அலட்சியப் போக்குடனேயே காணப்படுகின்றனர்.

இது தவிர்க்கப்பட வேண்டும் அனைத்து வகையான மக்களும் இது தொடர்பாக



விழிப்புணர்வுடன் செயற்பட்டு நீர்ச் சிக்கனத்தை கடைப்பிடித்து நீரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேபோன்று அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இது தொடர்பில் முன்னரை விட அக்கறை செலுத்த வேண்டும். அத்துடன் மழைநீர் சேகரிப்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

தி. திருஷாந்
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலன்றி யாழ். மாவட்ட மக்கள் இன்னும் சில வருடங்களில் குடிநீருக்காக தவிப்பதை தடுப்பதற்கு வேறு நடவடிக்கைகள் எதுவுமே இல்லை.

# தமிழ் மக்களுக்கு சுதந்திரம் வழங்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது

## ஐ.தே.க. அமைப்பாளர் எம்.பி.

(கொழும்பு)

தமிழ் மக்களின் நடமாட்ட சுதந்திரத்தைப் பறித்து 3 இலட்சம் மக்களை பலாத்காரமாக அடைத்து வைத்திருப்பது அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் செயற்பாடாகும் என்று ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண எதிர்க் கட்சித் தலைவருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

யுத்தம் நடைபெறும் போது நூற்றுக்கு நூறுவீதம் மனித உரிமைகளை பாதுகாப்பது கடினமான விடயம் எனவும் அவர் கூறினார்.

இது குறித்து எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

ஊடக அடக்குமுறை, ஊடகவியலாளர்களை கடத்துவது, கொலை செய்வது, அச்சுறுத்துவது போன்ற சம்பவங்கள் நாட்டுக்குள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அத்தோடு ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இவ்விடயங்களில் பெரும்பாலனவற்றின் பின்னணியில் அரசாங்கமே உள்ளது.

இவையனைத்தையும் மீறிய விதத்தில் யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரம், பேச்சுரிமை பறிக்கப்பட்டு அடிமைகளைப் போன்று இடைத்தங்கல் முகாம்களில் அரசாங்கம் தடுத்து வைத்துள்ளது. இச்செயலானது மனித உரிமை மீறல்களின் அதி உச்சக் கட்டமாகும்.

இவ்வாறான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாகவே அமெரிக்கா உட்பட பல நாடுகள் எம்மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.

எனவே அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டும்.

அப்பொழுது தான் அம்மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள். தமது சொந்த ஊரில் மரநிழலில் மன அமைதி காண்பார்கள்.

அதேவேளை யுத்தத்தின் இறுதி நாட்களில் எமது படையினர் மனித உரிமைகளை மீறியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

யுத்தம் நடைபெறும் போது நூற்றுக்கு நூறு வீதம் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது. இதுதான் உண்மை.

இவ்வாறானதொரு சூழலிலும் எமது படையினர் மனிதாபிமானத்தோடு செயற்பட்டுள்ளனர்.

எனவே தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமேயுள்ளது என்று தெரிவித்தார்.

(ஓ-4)

# பொதுத் தேர்லை நடத்தி

## பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதே திட்டம்

## ஜனாதிபதியின் ஆலோசகர் வாசு

(கொழும்பு)

ஜனாதிப்தித் தேர்தலுக்கு முன்பதாக பொதுத் தேர்தலே நடைபெறும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்கும் பாதுகாவலர் அன்று தொடக்கம் இன்று வரை மனித உரிமைகள் உட்பட ஜனநாயகத்தை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறார்.

எனவே தற்போதுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை ஜனாதிபதி முன்னெடுக்க முயல்கின்றார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவ்வாறான முறைமையை முன்னெடுக்க வேண்டுமெனில் தற்போது ஆட்சியிலிருக்கும் போதே ஜனாதிபதியால் முன்னெடுக்க முடியுமே. ஏன் அவ்வாறு செய்யவில்லை.

முதலில் நாட்டில் பொதுத் தேர்தலை நடத்தி பெரும்பான்மை பலத்தைப் பெற்று அரசியலமைப்புச் சபையை உருவாக்கி புதிய அரசியலமைப்பை உருவாக்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதே ஜனாதிபதியின் திட்டமாகும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக பொதுத் தேர்தலே நடத்தப்படும்.(ஓ-4)

# ஆன்மீக நிகழ்வு


(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 01-11-2009 ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் சைவப்புலவர் பண்டிதர் பொன். சுகந்தினியின் மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(ஓ-35)

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை



## இடபம்

### மங்கல ஓசை மனையில் கேட்கும்!

சவால் விடுவதையும் , அதை சமாளிப்பதையும் கைவந்த கலையாகக் கொண்டிருக்கும் இடப ராசி நேயர்களே!

நவக்கிரகங்களில் அள்ளிக் கொடுக்கும் வல்லமை பெற்ற சுக்கிரனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நீங்கள். எனவே , வாழ்க்கையில் பிரயாசை எடுக்காமலேயே பெரும் பலன்களை காண்பீர்கள். ருசிகரமாகப் பேசி மற்றவர்களை உங்கள் ரசிகர்களாக்கி விடுவீர்கள். பயணங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

நாடாளும் நபர்களின் நட்பால் நல்ல காரியங்களை சாதித்துக் கொள்வதில் வல்லவர்கள் நீங்கள் தான். கடவுள் நம்பிக்கை உங்கள் தன்னம்பிக்கையோடு சேர்ந்து செயல்படும் பொழுதுதான் வெற்றி வாய்ப்புகள் உங்கள் வீடு தேடி வருகிறது. கவிதை , நாட்டியம் , சங்கீதம் , இலக்கியம், சினிமா, பத்திரிகை போன்றவற்றில் முத்திரை பதித்தவர்களாக இருப்பர்.

பிறர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உங்களுக்கு சொந்த பிரச்சனை உண்ணிலடங்காமல் இருக்கும் . இப்படிப்பட்ட குணாதிசய ங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு -கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம் கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**கெட்டி மேளம் கொட்ட வைக்கும் எட்டாமிடத்து ராகு!**

**கீர்த்தியை அதிகரிக்கும் கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான் வெளிப் பயணத்தில் 27.10.2009 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிவகை செய்யப் போகிறார்கள்.

எட்டமிடத்து ராகு உங்களுக்கு எண்ணற்ற விரயங்களைக் கொடுக்கும் என்று சொல்வர். திட்டமிட்டபடி காரியங்களை முடிக்க முடியுமா? என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் மறைந்த ராகு நிறைந்த தனலாபத்தை கொடுக்கும் என்றும் மக்கட் செல்வங்களின் கல்யாணக் கனவுகள் நிறைவேற்றி வைக்கும் என்றும் ஜோதிட நிபுணர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

எனவே கவலை அகலும். கனவுகள் அனைத்தும் நனவாகும். ஏராளமான வாய்ப்பு வந்து அலைமோதும்

உத்தியோகஸ்தர்களுக்கு பணி ஓய்வு பெற்ற பின்னும் பணி தொடரும். ஊர் மாற்றச் சிந்தனைகள், இடமாற்றச் சிந்தனைகள், உத்தியோகம், தொழில் மாற்ற சிந்தனைகள் உள்ளத்தில் ஏற்படுமே தவிர உடனடியாக வந்து சேராது. குரு வீட்டில் ராகு சஞ்சரிப்பதால் குருவால் உங்களுக்கு என்னவெல்லாம் நன்மைகள் கிடைக்க வேண்டுமோ? அவற்றையெல்லாம் அவர் உங்களுக்கு வழங்குவார்.

குரு உங்களுக்கு லாபாதிபதியாயிற்றே எனவே அவர் உங்களுக்கு லாபத்தை வழங்க வேண்டுமல்லவா? ராசிநாதனுக்கு குரு பகை கிரகமாக இருந்தாலும் கிரகங்கள் தங்கள் ஆதிபத்தியத்தை விட்டுக்கொடுப்பதில்லை. மனிதர்களைப் போல அவை பகை பாராட்டுவதில்லை. எதை எப்பொழுது செய்ய வேண்டுமோ? அதை அப்பொழுதே கிரகங்கள் செய்து கொண்டேயிருக்கும்.

அந்த அடிப்படையில் அஷ்டமத்து ராகு ஆதாயத்தையும் கொடுக்கும் அதற்கேற்ற விதத்தில் விரயங்களையும் சுப விரயமாக்கி கொடுக்கும். இரண்டாமிடத்து கேதுவால் எதிர்பாராத மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். அப்படி என்ன மாற்றம்? என்று நீங்கள் நினைக்கலாம். குடும்பஸ்தானத்தில் அல்லவா? கேது சஞ்சரிக்கிறார். எனவே குண்டூசியளவு நீங்கள் சொல்லும் சொற்கள் யானை அளவாக மிகைப்படுத்திப் பார்க்கப்பெற்று குடும்ப உறுப்பினர்கள் உங்களோடு குஸ்தி போடாமலிருக்க எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துப் பார்த்துச் சொல்வது நல்லது. மனக்குழப்பங்கள் அகல வேண்டுமானால் மற்றவரை நீங்கள் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

வரவறிந்து செலவு செய்ய வேண்டும் என்பது முன்னோர் வாக்கு. ஆனால் இரண்டாமிடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வரவைக் காட்டிலும் செலவு கூடும். எனவே வீட்டை விரிவுப்படுத்திக் கட்டலாம் வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்ளை வாங்கலாம். பணத்தைப் பெட்டியில் அடுக்காமல் வங்கியிலும் போடாமல் மனதார செலவழித்து மகிழ வேண்டிய நேரமிது.

ஒக்டோபர் 27 என்பது உங்கள் மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய நாள். அன்றைய தினம் தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசிக்கு எட்டமிடத்தில் நான்காமிடத்திற்கு அதிபதியான சூரியனின் சாரத்தில் சஞ்சரிக்கின்றார். சுகஸ்தானத்திற்கு அதிபதியான காலில் ராகு சஞ்சரிக்கும் பொழுது செலவுகளும் வீண்விரயங்களும் கூட வந்து சேரலாம்.

நீங்கள் சிக்கனமாக இருந்தால் கூட உங்களைச் சுற்றியிருப்பவர்கள் சிக்கனமாக இருக்க விடமாட்டார்கள். தொழில் பங்குதாரர்களிடம் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. தொகை எங்கே என்று கேட்டால் இதோ இருக்கிறது என்று சொல்வர். ஆனால் உண்மையில் அவர் வசம் தொகை இருக்காது. அதை வேறொரு செலவிற்கு உபயோகப்படுத்திக் கொண்டிருப்பார். இருப்பினும் நீங்கள் பொறுமையோடு செயல்படுவது நல்லது.

இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்கவும் உத்தியோகம் மற்றும் தொழிலில் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்கவும் உங்கள் சுய ஜாதகத்தில் ராகு கேதுக்கள் இருக்கும் இடம் அறிந்தும் அதன் பாதசாரம் மற்றும் பார்க்கும் விதம் அறிந்தும் அதற்குரிய யோகபலம் பெற்ற நாளில் உங்கள் ராசிக்கு உடனடிப் பலன் தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து முறையான சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

அதே சமயத்தில் புனர்பூச நட்சத்திரக்காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.05 2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார். பாம்பு கிரகங்கள் நிழல் கிரகங்கள் என்றும் வர்ணிக்கப்படுகின்றன. அவை நிற்கும் வீட்டைப் பொறுத்தும் என்பீதால் புதன் வீட்டில் நிற்கும் கேது புதன் செய்ய வேண்டிய யோகத்தையும் கொடுப்பார். குரு காலில் சஞ்சரிப்பதால் குரு செய்யவேண்டிய பொறுப்புகளையும் செய்வார்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது புதன் 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் வாக்கு, தனம், குடும்பம், கல்வி, வாய்ப்புகள், வாரிசுகள், பூர்வீக சொத்துக்கள் போன்ற துறைகளில் எல்லாம் பெரிய மாற்றங்களை மட்டுமின்றி ஏற்றங்களையும் வழங்குவார். குறிப்பாக குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க மூத்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. யாருக்கும் வாக்கு கொடுப்பது நல்லது. பழைய கடன்களை கொடுக்க புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

பொதுவாக பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளும் கவலைகளும் உருவாகும் நேரமிது. பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சியில் அலைச்சல் ஏற்படும். அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிடாமல் கடிவாளம் போட்டு உங்களின் போக்கிற்கு கொண்டு வருவது நல்லது.

30.09.2010 முதல் 08.06.2011 வரை மூலம் நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் விரயாதிபதி செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 7க்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பயணத்தால் பலன் கிடைக்கும்.

அதிகாரிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும்.அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலமான செய்தி வந்து சேரும். தொழில் கூட்டாளிகள் விலகுவர். புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரித்தாலும் உங்களை வெல்ல யாராலும் முடியாது. விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

சான்றோர்களின் ஆலோசனைகள் மூலம் தடைகளைத் தகர்தெறிந்து நிம்மதி காண இயலும். பழைய சொத்துக்களைக் கொடுத்து விட்டு புதிய சொத்துக்களை வாங்குவீர்கள் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். தெசா புத்திபலம் பார்த்து வீடு கட்டும் முயற்சிக்கோ , வாங்கும் முயற்சிக்கோ அஸ்திவாரமிடுவது நல்லது.

**பூராடத்தில் வரும் ராகு புதிய பாதையை அமைக்குமா?**

29.12.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்ரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகின்றன. ராசி நாதனாகவும் 6 ஆம்இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் காலில் ராகு சஞ்சரிக்கும் பொழுது உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும். வியாதிகள் குறைந்து விரும்பிய படி உடல்நலம் அமைய மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள்.

அதே சமயத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் வியாழன் காலில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010க்கு மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கிறார். ஒன்றுக்கொன்று எதிர்துருவமாக விளங்கும் ராகு காலில் கேதுவோ கேது காலில் ராகுவோ சஞ்சரித்தால் திடீர் திடீரென மாற்றங்கள் வந்து சேரும்

அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரலாம். இழந்த சொத்துக் களை மீண்டும் பெறுவீர்கள். குடும்பச்சுமை கூடும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு உங்களுக்கு இனிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவும் இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் இல்லம் தேடி நற்பலன்கள் வந்து சேரவும் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.

சுய ஜாதகத்தில் ராகு கேதுக்களின் சார பலம் அறிந்து சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வதோடு நந்தீஸ்வரரை வழிபட்டு அங்குள்ள ராகு கேதுக்களையும் வழிபட்டு வாருங்கள். நாடி வந்த துயரங்கள் யாவும் ஓடி ஒளியும். நலம் யாவும் வீடு வந்து சேரும்.

(தொடரும்)

# தாய் நாடு அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது; மாற்றியமைக்கப்போவதாக கூறுகிறார் சரத்பொன்சேகா

## அமெரிக்காவில் தெரிவிப்பு

(கொழும்பு)

தாய் நாடு அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இதனை மாற்றியமைக்கப் போவதாக இலங்கையின் கூட்டுப்படைத் தலைமையதிகாரி சரத் பொன்சேகா அமெரிக்காவில் வைத்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வோஷிங்டனுக்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு பௌத்த ஆலயம் ஒன்றுக்கு சென்ற போதே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இவரின் இந்தக் கருத்து சரத் பொன்சேகா அரசியலில் ஈடுபடப்போவதற்கான கட்டியம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த நிகழ்வின் போது அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசிங்க மற்றும் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் சமந்தா சூரியபண்டார ஆகியோர் பங்கேற்கவில்லை.

இதன்போது பௌத்த ஆலயத்தின் தலைமை பிக்கு மஹரகம தம்மஸ்ரீதேரர் சரத் பொன்சோகவுக்கு ஆசி வழங்கினார்.

இதன் போது கருத்து தெரிவித்த சரத் பொன்சேகா அனைவரும் வன்னியின் யுத்த வெற்றியைப் பற்றி பேசுகிறார்கள் அங்கு இடம்பெற்ற இறுதி 10 நாள் யுத்தத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் 5 ஆயிரம் படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த படை வீரர்கள் தமது உயிர்களை தியாகம் செய்திருக்கா விட்டால் யுத்தம் நிறைவுற்றிருக்காது.

எனவே அவர்களுக்கு நாம் முதலில் வணக்கம் செலுத்தவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் தற்போது முடிவடைந்துள்ளது. தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வழி செய்யப்படவேண்டும். மீண்டும் நாம் ஒரு பிரபாகரன் தோன்றுவதற்கு வழிவகுத்துவிடக்கூடாது. நாம் நாட்டைபிழையான வழியில் செல்ல அனுமதிக்கக்கூடாது. எனவே நாட்டை சரியான வழியில் நடத்திச்செல்ல தாம் தயாராக இப்பதாக சரத்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வின் போது சரத் பொன்சேகாவுக்கு பலத்த வரவேற்பு அளிக்கபட்டுள்ளது. சரத் பொன்சேகா கருத்துக்களை தெரிவிக்கும் போது அதற்கு பாரிய கரகோசம் வழங்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# வாக்காளர் பதிவேடு திருத்தவேலைகள் நவம்பர் 1ஆம் திகதியுடன் முடிவடையும்

வாக்காளர் பதிவேடு திருத்த நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. கடந்த யூன் மாதம் முதலாம் திகதி இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கபட்டதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வாக்காளர் பதிவேடு திருத்த நடவடிக்கைகள் நவம்பர் முதலாம் திகதியுடன்முடிவடையும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ ரி.சுமணசிறி கூறினார்

கிராம சேவைஉத்தியோகத்தர் மூலம் திரட்டப்பட்ட தகவல்களை மாவட்ட செயலாளர்களுக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அடுத்த வருடம் மே மாதத்திற்குப் பின்னர் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களுக்கும் 2009 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேடு பயன்படுத்தப்படவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (ஓ)

சரியான சமயத்தில் உதவி செய்கிறவன் இரு மடங்கு உதவி செய்கிறான்.

~ ஸ்கொட்லாந்து

வலம்புரி

## மருத்துவ சிகிச்சை பெற அனைவரும் உதவ வேண்டும்

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக அம்புலன்ஸ் சேவையை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் இன்று ஆரம்பிப்பது மகிழ்விற்குரியது.

ஆசிரிய தலையங்கம் என்றால் குறை அளப்பதுதான் என்ற விமர்சனத்துக்கு வலம்புரி ஒரு போதும் ஆட்பட்டதில்லை.

நல்லவற்றை பாராட்டுவதும், திருத்தப்பட வேண்டியவற்றைச் சுட்டிக்காட்டுவதும் பத்திரிகைகளின் கடமை மட்டுமல்ல; அதுவே தர்மமுமாகும்.

யார் தொழிற் தர்மத்தைக் காப்பாற்ற தவறுகிறார்களோ அதுவே அவர்களுக்குப் பாதகமாக அமையும். இந்த உண்மை உணரப்பட வேண்டும்.

அரசியல் தொடக்கம் அடிமட்ட தொழில் வரை தொழிற்தர்மம் காப்பாற்றப்படுமாக இருந்தால் அநீதிக்கும், ஊழலுக்கும், செல்வாக்கு கலாசாரத்துக்கும் இடமே இராது.

எனவே பத்திரிகைகள் நல்லவற்றையும் சுட்டிக்காட்ட வேண்டும். நல்ல பணிகளைப் பாராட்ட வேண்டும் அவ்வகையில் இன்றைய நாள் ஏ-9 பாதையூடாக அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்படுவது, கொழும்பில் சிகிச்சை பெறவேண்டியவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும்.

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறுபவர்களில் சிலர் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி கொழும்பு சென்று மேலதிக சிகிச்சை பெறவேண்டிய தேவை இருக்கும். எனினும் போக்குவரத்துச் சீரின்மையாலும், ஏழ்மையாலும் கொழும்பு சென்று சிகிச்சை பெற முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகின்றது.

மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதுவே மிகப்பெரிய புண்ணியமாகும். அந்த புண்ணியகருமத்தைச் செய்வதற்கு எவரும் பின் நிற்கக்கூடாது.

எனவே ஏ-9 பாதையூடாக இன்று ஆரம்பிக்கப்படும் நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு யார் யாரெல்லாம் உதவி செய்தார்களோ அவர்களெல்லாம் உயிர் காக்கும் உத்தமப் பணியை செய்திருக்கிறார்கள். இவர்களின் பணி இறைவனால் ஆசீர்வதிக்கப்படும்.

அதேநேரம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸின் சேவைக்கு அப்பால் யாழ். போதனா வைத்தியசாலை, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தனியார் வைத்தியசாலைகளும் அம்புலன்ஸ் வண்டி மூலம் ஏ-9 பாதையூடாக நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உரியவர்கள் எடுக்க வேண்டும்.

இதன் மூலம் கொழும்பில் உடனடியாக சிகிச்சை பெற வேண்டியவர்கள் சிகிச்சை பெறுவதற்கும் அதன் மூலம் மனித உயிர்களைக் காப்பாற்றவும் முடியும்.


# உங்கள் உதிரம் பிறர் உயிர்காக்கும்

இரத்ததானம் - உயிர் காப்பது உன்னதமானது

- சடுதியான பெருமளவான குருதிப் பெருக்கினால்
- உயிர் பிரிவதை உடனடியாக இரத்தம் ஏற்றினால் தடுக்கலாம்
- குருதி உறையாநோய் குருதிச் சோகை டெங்குக் காய்ச்சல் போன்றவைக்கு குருதியை பல கூறுகளாகப் பிரித்து ஏற்றி பலரின் வாழ்வை நீடிக்கலாம், வளமாக்கலாம்.
- வலிமை மிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு புற்று நோயாளரின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்த கூறுகளை ஏற்றி வாழ்க்கைக்காலத்தை நீடிக்கலாம்.
- பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்படலாம்.



இரத்தவங்கி, போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம். 021 -222 3063


# சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களை உறவினர்கள் நன்கு பராமரிக்க வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பும் மக்களை உறவினர்கள், நண்பர்கள் அக்கறையுடன் நன்கு பராமரிக்க வேண்டுமென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொடிகாமம் ராமாவில் நலன்புரி நிலையத்தில், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்த 618 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 836 பேரினை அவர்களது சொந்த இருப்பிடங்க்ளுக்கு அனுப்பிவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்தாவது,

ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலும் துரிதகதியில் இம் மக்கள் தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்ற தனது நடவடிக்கைகளின் மூலமும் இம் மக்கள் தீங்களது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வதில் தான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றனர். இம் மக்கள் தங்களது எதிர்கால வாழ்க்கையைசிறந்த முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தான் தொடர்ந்து மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். இதேவேளைநலன்புரி நிலையங்களிலிருந்து சொந்த இருப்பிடங்களுக்கு செல்பவர்களுக்கென 25 ஆயிரம் ரூபாய் நிதியும் அத்தியாவசிய உபகரணப் பொதிகளையும் ஆறுமாத காலத்துக்கான உலக உணவுத்திட்டத்தின் கீழான நிவாரணமும் தொழில் சார்ந்த உபகரணங்களும் கூரைத் தகடுகளும் வழங்கப்பட்டு வருவது குறித்து எடுத்துக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இம் மக்கள் அனைவரையும் உறவினர்கள் நண்பர்கள் ஏற்று மிகவும் அக்கறையுடன் பராமரிக்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர், யாழ். அரச அதிபர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (சு)

## கலாநிதி சொக்கன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சித்திரத் துறை முகிழ்நிலை ஆசிரியரால் எழுதப்பட்ட *ஆரம்ப சித்திரக் கலை* என்னும் நூல் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி கலை அரங்கில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மாலை 3 மணிக்கு கலாநிதி சொக்கன் அவர்களின் நினைவுப் பேருரை கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசுறு பாடசாலை என்னும் தலைப்பில் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் நினைவுப்பேருரையை நிகழத்தவுள்ளார்.(ஓ)

## வலிகாமம் கல்வி வலய உதைபந்தாட்டபோட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் உதைப் பந்தாட்ட காலிறுதிப் போட்டிகள் இன்று யாழ்ப்பாணக்கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 16 வயதிற்கு கீழ்ப்பட்ட அணிகளான தமிழ் கந்தையா வித்தி , எதிர் மல்லாகம் மகா வித் , அருணோதயாக்கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி மற்றும் 18 வயதிற்கு கீழ்பட்ட அணிகளான புனித கென்றியரசர் கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தி , யூனியன் கல்லூரி எதிர் மாதகல் சென் யோசெப் மகாவித் , ஆகிய அணிகள் மேதவுள்ளன.

அத்துடன் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் 16 வயதிற்கு கீழ்பட்ட அணிகளான மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் அராலி இந்துக்கல்லூரி வட்டுமத்திய கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மற்றும் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட அணிகளான மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மயிலணி சைவ வித்தி , ஸ்கந்தவரோதயாக்கல்லூரி எதிர் விக்டோரியாக்கல்லூரி ஆகிய அணிகள் மோதவுள்ளன.

18 வயதிற்கு கீழ்ப்பட்ட அணிகளுக்கிடையிலாள அரையிறுதிப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் மற்றும் 16 வயதிற்கு கீழ்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இதன் இறுதிப் போட்டிகள் எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## யாழ் தாதியர் பயிற்சி நிலையத்தின் முன்புற நுழைவாயில் திறப்பு

யாழ். தாதியர் பயிற்சி நிலையத்தின் முன்புற நுழைவாயில் பாதுகாப்பு காரணங்களுக்காக பலவருட காலமாகப் பூட்டப்பட்டிருந்த நிலையில் அவ்நுழை வாயிலை திறந்து தங்களுக்கு வசதி செய்து தருமாறு மேற்படி நிலையத்தின் மாணவிகள் உட்பட நிர்வாகத்தினர் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேற்று முன்தினம் மேற்படி நுழைவாயிலை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



சமுதாயத்திலே இருந்து வரும் ஸ்தாபனங்களிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது மிகவும்எளிது. ஏனென்றால், எல்லா நிறுவனங்களும் அதிகஅளவிலோ ,குறைந்த அளவிலோ குறைபாடுடையவையாகவே இருக்கின்றன.

ஆனால் தனியொருமனிதனுக்கு- அவன் எத்தகைய நிறுவனத்தின் ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டு வாழ்ந்த போதிலும் அவன் தன் குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு யார் ஒருவர் உதவி செய்கிறாரோ அவரே மனித சமுதாயத்திற்கு உண்மையான நன்மை செய்பவராவர். தனி மனிதர்களின் நிலைஉயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

# இலங்கை தமிழர் பிரச்சினைக்காக பிரசார பயணம் ஆரம்பம்



(மதுரை)

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக நேற்று முதல் விழிப்புணர்வு பிரசார பயணம் ஆரம்பித்துள்ளது. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை தமிழர் பிரச்சினையில் முள்வேலி முகாமில் விடுவிக்கப்பட்ட தமிழர்களை மீண்டும் முகாமில் அடைத்து விட்டனர்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக விழிப்புணர்வு பிரசார இயக்கத்தை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளோம்.

சென்னையில் பா.ம.க. தலைவர் ராமதாஸ் இராமேஸ்வரத்தில் ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ. கன்னியாகுமாரியில் இந்திய கம்யூ.பொதுச்செயலாளர் தா.பாண்டியன் தலைமையிலும் கோவையில் நானும் இப் பயணத்தை மேற்கொள்கிறோம். நவம்பர் 2ஆம் திகதி திருச்சியில் பயணத்தை முடித்து பொதுக் கூட்டத்தில் பேசவுள்ளோம். இந் நிகழ்ச்சியில் கட்சிக் கொடிகளுக்குப் பதில் கறுப்பு கொடியுடன் தொண்டர்கள் பங்கேற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ஓ-4)

# இலங்கை அகதி முகாம்களிலிருந்து 68 ஆயிரத்துக்கு அதிகமானோர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

## டி.ஆர் .பாலு தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கை அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் இதுவரை 68 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். என டி.ஆர்.பாலு எம்.பி. கூறியுள்ளார்.

இலங்கை சென்று திரும்பிய எம்.பி.க்கள் குழுவுக்கு தலைமையேற்ற டி.ஆர் பாலு எம்.பி. டில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,,

இலங்கையில் அகதிகள் முகாம்களில் இருந்து தமிழர்களை அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இன்று முல்லைத்தீவுக்கு ஆயிரத்து 21 தமிழர்களும் யாழ்ப்பாணத்துக்கு மூவாயிரத்து 200 பேரும் வவுனியாவுக்கு ஆயிரம் பேரும் திருகோணமலைக்கு 59 பேரும் மட்டக்களப்புக்கு இரண்டு பேரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி இதுவரை 68 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் முகாம்களில் இருந்து அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று டி.ஆர்.பாலு கூறினார்.

இதற்கிடையே அப்பாவி மக்கள் தங்கியுள்ள முகாம்களின் நிலை திருப்தி அளிக்கும் வகையில் உள்ளது முகாம்களில் உள்ள மக்களின் நலனுக்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை பாராட்டுக்குரியதாகவுள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதர் புட்னீஸ் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## ஜனாதிபதி மஹிந்தவின்

# வியட்நாம் தொடர்பான அறிக்கையில் தயான் ஜயதிலக்கவின் பெயர் நீக்கம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் வியட்நாமிற்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டு ஊடக அறிக்கையில் டாக்டர் தயான் ஜயதிலக்கவின் பெயர் நீக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. வியட்நாம் விஜயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட முதலாவது ஊடக அறிக்கையில் தயானின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாகவும் பின்னர் அமைச்சர் போகொல்லாகம அதனை நீக்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொல்லாகம சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் அரசாங்க உயரதிகாரிகள் கலந்து கொண்டதாக இறுதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் தயான் ஜயதிலக்கவின் பெயர் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனக்குறிப்பிடப்படுகிறது. வெளிவிவகார அமைச்சருக்கும் தயான் ஜயதிலக்கவிற்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவி வரும் முறுகல் நிலையே பெயர் நீக்கத்திற்காக காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-4)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான அடையாள அட்டை விநியோகம் தீவிரம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணப் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளதாக ஆட்பதிவுத்திணைக்களம் தெரிவிக்கின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பதாரிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதற்காக விடுமுறை தினங்களிலும் செயற்பட்டு வருவதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-4)

# சென்னையில் பிரபல புடவைக் கடைக்கு பெருநகர் வளர்ச்சிக்குழு அதிகாரிகள் திடீர் சீல்

(சென்னை)

பிரபல புடைவை மற்றும் பல்பொருள் விற்பனை நிறுவனமான சரவணா செல்வரத்தினம் கடைக்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அதிகாரிகள் நேற்று முன்தினம் திடீரென்று சீல் வைத்து மூடியுள்ளனர்.

சென்னை தியாகராய நகர் வடக்கு உஸ்மான் வீதியில் உள்ள சரவணா செல்வரத்தினம் ஸ்டோர்ஸானது புடைவைகள் காலணிகள் உள்ளிட்ட பலவகை விற்பனைப் பொருட்களைக் கொண்ட மாபெரும் பல்பொருள் அங்காடி.

இந்தக் கடை அமைந்துள்ள கட்டடம் நகர விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும் கடை உரிமையாளர்கள் இதை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இந் நிலையில் திடீரென சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அதிகாரிகள் கடையை பூட்டி சீல் வைத்துள்ளனர். இச்சம்பவம் தி.நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-4)

# தமிழனுக்கு பெருமை தரும் சைவம்;ஆனால் சைவ சித்தாந்தம் அநேகருக்குத் தெரிவதில்லை

## விஸ்வ இந்துப்பரிஷத் மாநில துணைத் தலைவர்

(சென்னை)

தமிழனுக்குப் பெருமையே சைவம் தான் ஆனால் நூற்றில் 90 பேருக்கு சைவ சித்தாந்தம் பற்றி தெரிவதில்லை. இதைப் பயன்படுத்தி சிலர் மொழியின் பெயரால் குட்டையைக் குழப்பவும் பிளவு படுத்தவும் பார்க்கின்றது என விஸ்வ இந்து பரிசத்தமிழ் நாடு மாநிலத் துணைத் தலைவர் ஆர். பி.வி.எஸ். மணியன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு அன்று இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு உரையாற்றிய திருவாவடுதுறை ஆதீனத்தின் 23ஆவது சீர்வளர்சீர் குருமாக சந்நிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கூறுகையில்,


அறிவு அனுபவத்தோடு பொருந்திய கொள்கையுடையது சைவசிந்தாந்தம் ,தொல்காப்பியம் திருக்குறள் போன்றவற்றின் உட்கருத்துக்கள் சைவசித்தாந்தம் தான்.சைவசித்தாந்தத்தில் குறிப்பாக சிவ வழிபாட்டில் சாதி வேறுபாடு இல்லை.

பக்தர்கள் தங்கள் ஊர்களில் உள்ள பாரம்பரியம் மிக்க கோயில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எந்த ஊரில் வாழ்ந்தாலும் ஆண்டுக்கு ஒரு முறையாவது சொந்த ஊர் கோயிலுக்கு போவதை வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். பக்தர்கள் தங்கள் வருவாயின் ஒரு சிறு பகுதியை அந்தக் கோயில்களின் பராமரிப்புக்கு கொடுத்துதவ வேண்டும்.

இக்கோயில்கள் நமது பண்பாட்டுச் சின்னங்கள் இறைவன் குடியிருக்கும் இடங்கள் இவை முறையாக பராமரிக்கப்பட்டு காப்பாற்றவேண்டும். பூசை செய்யாவிட்டால் கோயில்கள் பாளாகும். அது ஒட்டுமொத்த சமூதாயத்திற்கே கேடு விளைவிக்கும். புதிய கோயில் கட்டுவதை விட இருக்கும் ஆலயங்களில் ஒரு கால பூசையாவது நடைபெற உதவுங்கள்.

பணம் பதவிப்பற்றுகளை குறைத்தால் துன்பம் குறையும். அதிகாலை எழுதல், தியானம் செய்தல் போன்றவற்றை கடைப் பிடியுங்கள் வாழ்வில் சித்தாந்தங்களை கடைப்பிடித்து தங்களால் என்ன முடியுமோ அந்த அளவுக்கு தொண்டு செய்து சிறப்பாக வாழுங்கள் என்றார். (ஓ-4)









கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களை விடுவிக்கும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அரச அதிபர் க.கணேஷ் உட்பட்ட குழுவினரையும் மக்களையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் விஜய் அன்ரனி இசைப்பள்ளி அரசின் அனுமதி கிடைத்ததும் அமைக்கப்படும்

## கொழும்பில் விஜய் அன்ரனி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் விஜய் அன்டனி மியூசிக் ஸ்கூல் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளேன். இது தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்து பேசி அனுமதி பெற இருக்கின்றேன். கர்நாடக இசை மட்டுமன்றி இசையில் தொழில்நுட்பத்தையும் சேர்த்து பயிற்சி அளிப்பதே என் நோக்கம் என்று கூறினார் பிரபல இந்திய திரைப்படப் பின்னணி இசையமைப்பாளர் விஜய் அன்டனி.

கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில், விஜய் அன்டனியின் இன்னிசை நிகழ்வு நடைபெற்றது. நாமல் ராஜபக்ஷவின் இளைஞர்களுக்கு நாளை திட்டத்தின் ஓர் அம்சமாக இந்த இன்னிசை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இன்னிசை நிகழ்வை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய விஜய் அன்டனி, தாயகம் திரும்புமுன் இணையத்தளம் ஒன்று நேர்காணல் ஒன்றை வழங்கிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத் தமிழ் வித்தியாசமானது. நாம் பேசும் தமிழைவிட தெளிவானது. நாம் சற்று நீளமாக, ஆங்கிலம் கலந்து தமிழைப் பேசுகின்றோம். ஆனால் யாழ்ப்பாணத் தமிழ் அப்படியல்ல, அவர்கள் பேசும் தமிழ் சிறப்பாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இன்னிசை நிகழ்வைக் காண சுமார் 2 இலட்சம் பேர் அந்த அரங்கத்தில் கூடியிருந்தனர். அங்கு அமர்வதற்கு நாற்காலிகள் கூட இருக்கவில்லை. நின்றபடியே அவர்கள் இசையை ரசித்தார்கள். இது மனதில் நெகிழ்வை ஏற்படுத்தியது.

அங்கு மேடையில் வைதத்து ஒரு விடயத்தைக் கூற இருந்தேன். ஆனால் கூறகிடைக்கவில்லை. அதாவது யாழ்ப்பாணத்தில் விரைவில் விஜய் அன்டனி மியூசிக் ஸ்கூல் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளேன். இது தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்து பேசி அனுமதி பெற இருக்கின்றேன். கர்நாடக இசை மட்டுமன்றி, இசையில் தொழில்நுட்பத்தையும் சேர்த்து பயிற்சி அளிப்பதே என் நோக்கம்.

நான் யாழ்ப்பாணம் பயணித்த பாதையில் ஏழெட்டு கோவில்கள் இருக்கக் கண்டேன். அந்த வகையில் யாழ்ப்பாணம் தெய்வீகமான ஓரிடமாகவே எனக்கு எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் அபிவிருத்தியடைந்து நல்லதொரு சூழ்நிலை விரைவில் ஏற்பட வேண்டும். ஏற்படும் என்று நம்புகின்றேன். என்றார். (ச–5)

## அவுஸ்திரேலியாவில் கைதான கப்பல் மட்டு.வை சேர்ந்தது

(கொழும்பு)

இலங்கையர்கள் 26 பேருடன் அவுஸ்திரேலியாவில் கைப்பற்றப்பட்ட படகு மாங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவருடையது என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சட்ட விரோத குடியேற்றவாசிகளைத் தடுக்கும் பிரிவினர் அவுஸ்திரேலியாவில் பெடரல் பொலிஸாருடன் மேற்கொண்ட விசாரணைகளின் போது இந்தத் தகவல் வெளியானதாக உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் போது கிழக்குப் பிரதேச மீனவர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட படகு ஒன்றே இதற்காகப் பயன்படுத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளின் போது தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்த அந்த மீன்பிடிப் படகில் இருந்த ஏனைய 24 பேரும் கிழக்கின் எந்தப் பகுதியிலிருந்து படகில் ஏறினார்கள் என்பது தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–14)




இளைஞர்களுக்கான நாளை நிகழ்வுகளில் மூலம் நடத்தப்பட்ட ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரார் போய்ஸ் விளையாட்டுக் கழகவீரர்களையே படத்தில் காண்கிறீர்கள். இவர்கள் இறுதிப் போட்டியில் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. அமைப்பாளர் எஸ்.பி.யுடன் அமைச்சர் ராஜித்த இரகசியப் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கும் நிர்மானம் மற்றும் பொறியியல் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவுக்குமிடையில் கடந்த 25 ஆம் திகதி இரகசியப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றதாக நம்பத் தகுந்த தரப்புத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.


இவர்களுக்கு நெருக்கமான நண்பர் எனக் கூறப்படும் சுனில் குணவர்த்தனவின் தெஹிவளை களுபோவில பிரதேசத்தில் உள்ள வீட்டிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.


எஸ்.பி.திஸநாயக்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக நியமிப்பது தொடர்பில் அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒத்துழைப்புக்கள் சம்பந்தமாக அமைச்சர் ராஜித்த இதன்போது நீண்ட கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டுள்ளதுடன் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அரசியல் வருகைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு தேர்லுக்கு முன்னர் உருவாக்கப்படவுள்ளதாக வலியுறுத்தியுள்ளதாக எஸ்.பி.திஸநாயக்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உட்கட்சி மோதலை அரச ஊடகங்கள் வழியாக வெளியிடுமாறு ராஜித்தவிடன் கேட்டுள்ளார்.

திடீரென இவ்வாறான கூட்டமைப்பு கட்டி எழுப்பப்பட்டாலும் ஜனாதிபதி வேட்பாளர் ஆவதற்கு மனோ கணேசன் மற்றும் ஹக்கீமின் ஒத்துழைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலானோரின் ஆதரவும் தனக்கிருப்பதாக எஸ்.பி.கூறியுள்ளார். (ச–5)







எம்.டி.குணசேன நிறுவனத்தின் யாழ். புத்தகக் கண்காட்சியில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கல விளக்கேற்றுவதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கூட்டாகத் திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# தனது குற்றச்சாட்டை தானே விசாரித்து முடிவை மேற்கொள்ளும் அரசின் திட்டம்

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசு தான் மேற்கொண்ட யுத்த குற்றங்கள் தொடர்பாக தானே விசாரித்து ஒரு முடிவுக்கு வரும் என்பது நம்பக்கூடிய விடயம் அல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வன்னிப் போரின் இறுதிக் காலப்பகுதியில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றதாக கூறப்படும் அமெரிக்க அரசின் அறிக்கை இலங்கை அரசிற்கு அனுப்பட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை குறித்து இலங்கை அரசு விசாரிக்கும் என மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். அரசின் இந்த அறிவிப்புக்குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,


ஏற்கனவே இலங்கையில் பல மனித உரிமை மீறல்கள் நடைபெற்றன. இது தொடர்பாக இலங்கை அரசிற்கு பல்வேறு அழுத்தங்கள் வந்தன. இந்த அழுத்தங்களின் பின்பு அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள ஆரம்பித்தது. அதில் பிரான்சில் உள்ள தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் 18 பேர் மூதூரில் கொல்லப்பட்டார்கள். ஒருசில நாடாளுமன்ற உறுப்பினரின் கொலைகள், வெளிவிவகார அமைச்சரின் கொலை என சில விசாரணைகள் தொடர்பாகவே இது அமைந்தது.

இதனை மேற்பார்வை செய்ய இந்தியாவின் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த பகவதி தலைமையில் பல்வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த 17 ற்கும் மேற்பட்டவர்கள் பார்வையாளராக இருந்தார்கள். ஏறத்தாழ ஒரு வருடம் அவர்கள் இதனை அவதானித்தன் பின்பு அது தவறாக செல்கிறது என்பதை அறிந்து நிபுணர்குழு அதிலிருந்து விலகிக் கொண்டது.

அது தொடர்பான விசாரணை முடிவுற்றதாக அரசாங்கம் கூறினாலும் கூட இன்று வரை ஒருவர் கூட கைது செய்யப்பட்டதாகவோ அல்லது அது தொடர்பாக தண்டிக்கப்பட்டதாகவோ அல்லது விசாரணை முடிவுகள் வெளியிடப்பட்டதாகவோ இல்லை.

இந்நிலையில் அரசின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் பொறுமை வேண்டும் என கூறுவதே உலகத்தை ஏமாற்றும் நடவடிக்கையே. அதாவது இராணுவத்தினரும் பொலிஸாரும் துணைப்படைப் பிரிவினரும் மேற்கொண்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. எனவே இவர்கள் கைது செய்யப்பட்டால் படையினரோ அல்லது பல்வேறுபட்ட தரப்புக்கள் இலங்கை அரசிற்கு எதிராக திரும்பலாம் என்ற பயம் அரசிற்கு இருக்கிறது.

இது மாத்திரமல்ல; இவர்கள் இன்று வரை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, கொலைகள் தொடர்பாக எவரையும் கைது செய்யவில்லை. ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பெயர் விபரங்கள் கூட கொடுத்திருந்தோம் எவரும் கைது செய்யப்படவில்லை. அப்படியான ஒரு அரசாங்கம் தான் அல்லது தனது இராணுவத்தினர் செய்த யுத்தக்குற்றங்களை விசாரித்து தக்க முடிவிற்கு வருவார்கள் என்பது முழுமுட்டாள் தனமே தவிர வேறொன்றுமில்லை.



இலங்கை அரசு தொடர்பான ஒரு முழுமையான புரிதல் சர்வதேச சமூகத்திற்கு உள்ளது இந்நிலையில் இலங்கை அரசு விசாரணை நடத்தவேண்டும் எனக் கேட்பது காலத்தை வீணடிக்கும் செயலே.

இருதரப்புக் குற்றமிழைத்ததாக கூறப்படுகிறது இது தொடர்பாக முழுமையாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் தவறுகள் எங்கு இருக்கின்றது என்று பார்க்கப்படவேண்டும். அந்தத் தவறுகள் களையப்பட்டு தவறுகள் நடந்திருந்தால் அதற்கான தீர்வுகள் எவ்வாறு எனப் பார்க்கப் படவேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சரியான தடத்தில் செல்லவேண்டுமெனில் அவை எல்லாம் பார்க்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரணமாக நம்புகிறது. என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

# குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாமை குறித்து இலங்கையுடன் இணக்கப்பாடு வேண்டும்-ஐரோ. ஒன்றியம்

(கொழும்பு)

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாமை குறித்து இலங்கை அரசாங்கத்துடன் யதார்த்த பூர்வமான இணக்கப்பாடொன்று எட்ப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. இலங்கையில் தற்போது நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் யதார்த்த பூர்வமாக இணக்கப்பாடொன்று எட்டப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

இலங்கை நிலைமைகளை விருத்தி செய்வது தொடர்பில் இணைந்து செயற்பட திட்டமிட்டுள்ளதாக 27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும், தமது விசாரணைகளின் மூலம் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளதாக அடையாளப்படுத்தப்பட்ட இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை திட்டம் வழங்கப்படுமா என்பது குறித்து எவ்வித கருத்துக்களும் வெளியிடப்படவில்லை. மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்கப் படாத நிலைமை முடிபுக்கு கொண்டுவரப் படவேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் சட்டவிரோத படுகொலை சம்பவங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக உறுப்பு நாடுகளது வெளிவிவகார அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இடம்பெயர் மக்கள் தொடர்ச்சியாக தடுப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் நிலைமை ஓர் சர்வதேச சட்ட மீறலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இடம் பெயர் மக்கள் சுதந்திரமாக இடம் நகரவும் அம்மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

### ஈழத்தமிழ் மக்களைக் காப்...

கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டனர். இந்த அத்துமீறல்களை நடத்திய இலங்கையை நமது மத்திய அரசு எச்சரிக்க வில்லை.

இந்தச் சூழலில் நாதியற்று கிடக்கும் தமிழக மீனவர்களையும் ஈழத் தமிழர்களையும் பாதுகாக்க இலங்கையில் மீண்டும் போர் மூளும். அதைப் பிரபாகரன் தலைமையேற்று நடத்துவார்.

கடந்த ஆண்டு, பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்திய போது, பாகிஸ்தானுக்கு மத்திய அரசு கடும் எச்சரிக்கை விடுத்தது. அதே நேரத்தில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை விடயத்தில் மௌனம் காக்கிறது.

இலங்கை கடற்படையில் சீனர்களும் இருக்கிறார்கள். நமது மீனவர்களை சிங்களவர்களுடன் சேர்ந்து சீனர்களும் தாக்குகிறார்கள்.

ஏற்கனவே வடக்கிலும் கிழக்கிலும் இந்தியாவுக்கு எதிராக அத்துமீறித் தாக்குதல் நடத்திவரும் சீனா, தற்போது இராமேஸ்வரத்திலும் தாக்குதல் நடத்தி பெரும் நெருக்கடி தரத் தயாராகிவிட்டதையே இது காட்டுகிறது.

இவ்வாறு வைகோ பேசினார். (ச-5)

### எதிர்வரும்...

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளின் விரிவான அரசியல் கூட்டணி அமைக்கும் திட்டத்திற்கு ஆளும் கட்சிகள் சில ஆதரவளிக்கவுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார். எனவே எதிர்வரும் தேர்தல்களின் போது அரசாங்கத்துக்கு எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

### இரு தேர்த...

அரசாங்கம் அதற்கும் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்கக் கூடிய சக்தி ஆளும் கட்சியிடம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி பல்வேறு தரப்பினருடனும் பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

### நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த...

யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 960 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 42 பேர் நேற்றிரவு யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இம் மக்களில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவை சொந்த இடமாகக் கொண்ட 168 குடும்பங்களைச் சேர்ந்த 510 பேர் நேற்று மாலை வட இந்து மகளிர் கல்லூரிக்கு அழைத்துவரப்பட்டு பிரதேச செயலக அலுவலர்கள், படையினரால் குடும்பப் பதிவு செய்யப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டன.

அத்துடன் சங்கானை பிரதேச செயலகப் பிரிவை சொந்த இடமாகக் கொண்ட 375 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 189 பேரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவை சொந்த இடமாகக் கொண்ட 417 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 343 பேர் நேற்று நள்ளிரவு அழைத்துவரப்பட்டனர்.

இம் மக்களும் பிரதேச செயலக அலுவலகர்களினாலும் படையினராலும் குடும்பப் பதிவுகள் செய்யப்பட்டு சொந்த இடங்களுக்கும் உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப் பட்டனர்.

மேற்படி விடுவிக்கப்படும் மக்களை நேரில் சென்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் வந்து நிலைமைகளை கேட்டறிந்ததுடன் 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் வழங்கினார்.

வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 10 ஆயிரத்து 692 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 517 பேர் இதுவரை சொந்த இடங்களுக்கு உறவினர்கள், நண்பர்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

கோப்பாய் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள வர்கள் இன்றும் மிருசுவிலில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை நாளையும் யாழ். மாவட்டத்தில் சொந்த இடங்களுக்கு உறவினர்கள், நண்பர்களுடனும் செல்ல அனுமதிக்கப்படுவர். (ச-5)

### கரும்புலி சந்...

இயக்கத்தில் இணைந்து கிளிநொச்சியில் பயிற்சி பெற்றவர் எனவும் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நயினாதீவு கோவிலில் பணிபுரிந்து வந்தாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப் பிட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து போலியான அடையாள அட்டை ஒன்றும் மீட்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதானவர் தற்போது பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டுவருகிறார் என பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (ச-5)

### தமிழ் மக்கள் விடுவிக்கப்...

அமெரிக்காவின் வாசிங்டனில் உள்ள பௌத்த விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பயங்கரவாதத்தில் இருந்து மீட்கப்பட்ட நாடு தொடர்ந்தும் தவறான வழியில் செல்லப்படுமாயின் அதனை சரியான வழியில் இட்டுச் செல்வதற்காக தனது சீருடையைக் கழற்றிவிட்டு சமூக சேவையில் ஈடுபட தான் தயாராக இருப்பதாக கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றியின் உண்மையான கௌரவம் போரின் இறுதிக்கட்டத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கே வழங்கப்பட வேண்டும். யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் முகாம்களில் சிறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த மக்களை விடுவிக்காது போனால் எதிர் காலத்தில் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகக்கூடும் எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார். (மற்றொரு செய்தி உள்ளே)(ச-5)

### ஜனாதிபதி ஆட்சிமுறையை...

வந்தனர் லிப்ரன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று கூடினர். அங்கு பொதுக் கூட்டமும் இடம் பெற்றது.

மக்களை ஒன்று திரட்டி ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்குமாறு தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அங்கு உரையாற்றும் போது கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒரு வருடம் உள்ளது. அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால் மகிந்த ராஜபக்ஷவை தோல்வியடைய செய்வோம். 2006 ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவுடன் தான் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார் என்றும் சோமவன்ச அமரசிங்க சுட்டிக்காட்டினார்.

மாலை 6.30 வரை இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியால் கொழும்பில் பொரள்ளை, மருதானை, ஹைப்பாக்கோணர் மற்றும் கொழும்பு 7 ஆகிய பகுதிகளில் மூன்று மணித்தியாலங்களுக்கும் மேலாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.